விலை : 20.00
பக்கங்கள் : இருபது
JAFFNA
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15, வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 31 புதன்கிழமை (14.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146

# இலங்கையிலிருந்து சென்றால் அகதி அந்தஸ்து கிடைக்காது!



## மத்திய அரசு அறிவிப்பு

(புதுடெல்லி)

**இலங்கையில் இருந்து தமிழகத்துக்குச் செல்வோரை அகதிகளாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இந்திய மத்திய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்து அமைதி திரும்பியுள்ளதால், 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றுக் கொள்வதை இந்திய அரசாங்கம் நிறுத்தியுள்ளதாக நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டுக்குப் பின்னர இலங்கையில் இருந்து வந்த எவரையும் அகதிகளாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று மத்திய அரசு தமக்குப் பணித்துள்ளதாக மண்டபத்தில் உள்ள சிறப்பு பிரதிமாவட்ட ஆட்சியர் பணியக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழகத்துக்கு அண்மையில் படகுமூலம்சென்ற 10 இலங்கைத்

20 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவ ஆட்சேர்ப்பில் 50 விண்ணப்பங்கள் !

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற முதற்கட்ட இராணுவ ஆட்சேர்ப்பில் 50 வரையான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

கடந்த 8-ம் திகதி முல்லைத்தவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் முதற்கட்ட ஆட்சேர்ப்பு நடைபெற்றது.

இராணுவத்தில் பொறியியல், பிளம்பிங், வெல்டிங், மோட்டார்

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஆட்சி அமைக்கும் பா.ஜ.க ! கருத்துக்கணிப்பால் கலக்கம்

(புதுடில்லி)

இந்தியாவில் ஒன்பது கட்டங்களாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையுடன் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இத்தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெறும் என கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்துள்ளன.

இத்தேர்தலுக்கு ஆறு கிழமைகளாக இடம்பெற்ற வாக்களிப்பைத் தொடர்ந்து நேற்று மாலை இந்தியாவின் பல்வேறு செய்தி நிறுவனங்களும் தேர்தல் முடிவுகள் தொடர்பிலான தமது கருத்துக் கணிப்புக்களை வெளியிட்டிருந்தன.

இதன்படி, இத்தேர்தலில் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ்

20 ஆம் பக்கம் பார்க்க..

## வடக்கில் அஞ்சலிக்குத் தடை கவனம் செலுத்துகிறது ஐ.நா.

(யாழ்ப்பாணம்)

இறுதிப்போரின் போது இறந்த உறவுகளுக்கு வடக்கு மக்கள் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளமை குறித்து அவதானம் செலுத்தவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்ற போது, கேள்வி ஒன்றுக்கு பதில் வழங்கிய பேச்சாளர் ஸ்ரீபன் டுஜாரிக், அந்த தடை குறித்து தாம் அறியவில்லை. எனினும் அது தொடர்பில் ஆராய்வதாக குறிப்பிட்டார்.

இலங்கையின் இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய கடந்த வாரம் விடுத்திருந்த எச்சரிக்கை ஒன்றில் போரில் இறந்தவர்களுக்காக பொதுநிகழ்வுகள் நடத்தப்படு

20 ஆம் பக்கம் பார்க்க..

## இன அழிப்பு நாளாக மே 18 பிரகடனம் !

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது உறவுகளை அழித்து எமது இனத்தை அடிமைப்படுத்திய நாள் இலங்கையின் தேசிய வெற்றி விழாவாக கொண்டாடுகின்றது. இன அழிப்பு ஒன்றின் மூலம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறை படிந்த நாளாகும். அந்நாள் தமிழினம் இன அழிப்புக்குள்ளாக்கப்பட்ட நாளாகும். அந்நாளை இனவழிப்பு நாளாகவே நாம் பிரகடனம் செய்

20 ஆம் பக்கம் பார்க்க..

## பல்கலை மாணவர் மீது மிளகாய்த்தூள் வீச்சு

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மீது நேற்று மிளகாய்த் தூள்வீசித்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாணவர் அடக்குமுறையை நிறுத்துமாறு கோரி, சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் மீது நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் சிலரால் இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மிளகாய்த் தூளை நீரில் கரைத்து மாணவர்கள்மீது தாக்குதலை நடத்த

20 ஆம் பக்கம் பார்க்க..

## மே-18 ஆம் திகதியை கரி நாளாக்குவோம்

### 18 மே இயக்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட மே 18 ஆம் திகதியை கரி நாளாக நினைவுகூருவோம் என்று 18 மே இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்துயரங்கள் ஊடாக பயணித்த காலம் ஐந்தாண்டுகளைக் கடக்கின்றது. முள்ளிவாய்ககாலில் மூர்ச்சையாகிப் போனவர்களுக்கு எந்தப் பெறுமதியையும் தராத உலகம் நம்மை வெறுங்கையோடு பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கின்றது.

இந்த அலைந்துழல்வு வாழ்க்கைப் பாகத்தில் நம்மிடம் எஞ்சியிருப்பதெல்லாம் எம் மீது திணிக்கப்பட்ட வன்கொடுமைகளின் நினைவுகள் மட்டும்தான்.

முள்ளிவாய்க்கால்பறித்துக்கொண்டவைகளிலிருந்து மிச்சமாய் இருக்

20 ஆம் பக்கம் பார்க்க..

## அமைச்சர் டக்ளஸின் அழைப்பை நிராகரித்தது த.தே.கூட்டமைப்பு !

(வவுனியா)

இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் பங்கேற்க வேண்டும் என்று அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா மீண்டும் விடுத்திருந்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்துள்ளனர்.

பல தசாப்தங்களாக நீடித்திருக்கும் இனப்பிரச்சினையை ஒரு காலக கெடுவுக்குள் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவாலேயே முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

இப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையே ஒரு அனுசரணையாளராக பேச்சுவார்த்தைகளை தொடங்க தென்னாபிரிக்கா உதவ முன்வந்துள்ள நிலையில், அதற்கு குந்தகம் ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையே அமைச்சரின் முன்னெடுப்பு என்று கூட்டமைப்பின்எம்.பிஒருவர்கூறினார்

தமிழர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் எனக் கூறும் டக்ளஸ் தேவானந்தா, நல்ல பல சந்தர்ப்பங்கள் கூட்டமைப்பின்



20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளையார் இன்** எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன. விசேடமான உணவுகளான
- மசாலா தோசை – 150/=மட்டுமே.
- பேப்பர் தோசை, வெங்காய தோசை, நெய்த் தோசை – 120/= மட்டுமே.
- பூரி, சப்பாத்தி – 100/ மட்டுமே.

தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, பிறைட் றைஸ், சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம். (சி-7357)

இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829

**சுகவாழ்வுக்கான பயணம்**

"தலையாரி"

இனப்பெருக்க, பாலியல் சுகாதாரம் தொடர்பான கல்வி, தகவல் ஆலோசனை மையம்.

"இனப்பெருக்க பாலியல் சுகாதாரம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளுக்கும் கொலையோ, தற்கொலையோ தீர்வல்ல."

இனப்பெருக்கபாலியல்சுகாதாரரீதியான பிரச்சினைகள் இருப்பதாக உணர்கிறீர்களா? எம்முடன் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளைப் பெற்று ஆரோக்கியமான வாழ்வைத் தொடரலாம். உங்கள் இரகசியங்களை நாம் பாதுகாப்போம்.

T.P:- 021 221 7557
021 307 4618
Email :- crshjfhl@gmail.com (சி-7309)

அன்னசத்திரலேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## சேவைக்கு ஓர் சான்று



### குழந்தைவேலு சோமசுந்தரம் (J.P)

நிழல் நிறுவன ஸ்தாபகராகவும் யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க பொது முகாமையாளராகவும் சிங்கள மற்றும் ஆங்கில ஆசிரியருமான குழந்தைவேலு சோமசுந்தரம் (J.P) அவர்கள் யாழ்ப்பாண நீதிமன்ற வலயத்துக்கான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டமையினையிட்டும் 14.05.2014 இன்று இணுவில் அறிவாலயத்தில் கௌரவிக்கப்படுவதையிட்டும் பெருமகிழ்வடைவதோடு அவரது சேவை மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில். (6378)

மாணவர்கள், ஆசிரியர்கள்,
VMI கல்வி நிலையம்

## இதய அஞ்சலி



### கந்தையா நாகரத்தினம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுந்தராம்பாள் கதிர்காமு அவர்களின் அன்புத் தந்தையார் கந்தையா நாகரத்தினம் அவர்கள் நேற்றைய தினம் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்ம ஈடேற்றத்திற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/கிளிநொச்சி
மகா வித்தியாலயம். (சி-7364)

ஆசிரியர்
நலன்புரிச் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 15.01.1928 இறப்பு 13.05.2014

### கந்தையா நாகரத்தினம்

எமது வலயத்தின் கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயத்தின் அதிபர் நாகரத்தினம் நடேசமூர்த்தி அவர்களின் தந்தையார் தம்பிராய் பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நாகரத்தினம் அவர்கள் 13.05.2014 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-7365)

## வீடு இடிந்து சிறுமி பலி

(சென்னை)

தமிழகம், மேலூர், திருவாதவூரிலுள்ள அகதி முகாம் வீடொன்று இடிந்து விழுந்ததில் இலங்கையைச் சேர்ந்த 11 வயது சிறுமியொருவர் பலியாகியுள்ளார்.

அத்துடன், அவரது இரு சகோதரர்களும்படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இதில் சரண்யா அதிபதி என்ற சிறுமியே பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை முதல்பெய்து வந்த அடை மழை காரணமாகவே இந்த வீடு இடிந்து விழுந்துள்ளதாக தெரிவித்த மேலூர் பொலிஸார், இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-11)

# தொழிற்சங்க நடவடிக்கைகளால் எவையும் பாதிப்படையக் கூடாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களின் விரோதத்தை சம்பாதிக்காத வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அமைய வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உரிமைகளை வென்றெடுக்கும் அதே வேளை, மக்களுக்கு எவ்வாறு சேவையாற்ற முடியும் என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும்.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்ற நிலையில் வெயிலில் காய வேண்டிய அவசியமில்லை.

கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சுதந்திரமாக மே தினக் கூட்டங்களை நடத்திய தரப்பினர், நாட்டில் சுதந்திரம் இல்லை என சர்வதேசத்திடம் முறைப்பாடு செய்கின்றனர்.

நாட்டில் கருத்துச்சுதந்திரத்திற்கு இடமில்லை எனத் தெரிவிக்கும் தரப்பினர் அலரி மாளிகைக்கு முன்னால் சுதந்திரம் எங்கே எனக் கேள்வி எழுப்பி போராட்டம் நடத்துகின்றனர்.

கடந்த காலங்களில் போராட்டங்களில் ஈடுபட்டு அடி வாங்கியவர்களும், அடித்தவர்களும் அவற்றை மறந்து விட்டனர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

விளக்கேந்திய சீமாட்டி எனப் போற்றப்படும் புளோரன்ஸ் நைட்டின் கேளின் சிரார்த்த தினம் உலகத் தாதியர் தினமாக கொண்டாடப்படுகின்றது. (எ-11)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

### விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, **வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம்**, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் **செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 021 224 0017, மின்னஞ்சல்** chairmanvsps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 16.05.2014ஆம் திகதி தொடக்கம் 29.05.2014ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் ( தொலைபேசி: 021 224 0017, மின்னஞ்சல்** vspsch@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 16.05.2014 முதல் 29.05.2014 வரை **9.00** மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05. விலைக்கேள்விகள் 30.05.2014ஆம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதியை தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 30.05.2014 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 21.05.2014 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | இணுவில் கிழக்கு கருணாகரப் பிள்ளையார் கோயில் வீதி | 2.852 | 03 மாதங்கள் | M7/C8 | 28,600.00 |
| 2 | கறுத்தான் வடலி மல்வம் 02 வது ஒழுங்கை | 1.995 | 03 மாதங்கள் | M7/C8 | 20,000.00 |
| 3 | கந்தரோடை பருத்தியோலை விளாங்கனை வீதி திருத்தம் | 2.254 | 03 மாதங்கள் | M7/C8 | 22,550.00 |

**தி.பிரகாஷ, தவிசாளர்.**

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.** (சி-7361)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA



# சுங்கத் திணைக்களத்தில் பதவி வெற்றிடம்

இலங்கை சுங்க திணைக்களத்தின் நிதி திட்டமிடல் அமைச்சின் சுங்க உதவி அட்சகர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை மும்மொழிகளிலும் எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் 18 வயது தொடக்கம் 24 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகளாக க.பொ.த. சாதரணப் பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் இரு பரீட்சைகளிலும் ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது திறமை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த.பெ.இ. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

அத்துடன் பரீட்சைக் கட்டணமாக 750 ரூபா கட்டணம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பம் கோரல் பற்றிய மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலயத்திலோ 9 ஆம் திகதி வெளியான வர்த்தமானி பத்திரிகையிலோ பார்வையிட முடியும். (அ)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் கலாபூஷண விருதிற்காக இவ்வருடமும் சிற்பம், ஓவியம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற கலைத்துறைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 60 வயதிற்கு மேற்பட்ட விருதினை பெறத் தகுதியுடைய கலைஞர்கள் விண்ணப்பப் படிவத்தை தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந்த் அறிவித்துள்ளார். (அ)

## இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியின் இயல், இசை, நாடக விழாவில் இன்று

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடக விழா யாழ்ப்பாணம் கல்லூரி வீதி, நீராவியடி எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை வரை பிற்பகல் 4 மணிக்கு செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இரண்டாம் நாள் நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வின் ஆசியுரையை யா/ கிளிநொச்சி மாவட்ட அகில இலங்கை ஜம்யியதுல் உலமா தலைவர் வழங்குவர்.

அதனைத்தொடர்ந்து வடக்குமாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல். இளங்கோவன் வாழ்த்துரையை நிகழ்த்துவார். சைவச் சிறுவர் இல்ல மாணவர்கள் வழங்கும் காவடியும் ஜி.நக்கீரன் குழுவினர் வழங்கும் வேணுகான இசையும் புஷ்பாலய நடன சபா மாணவிகள் வழங்கும் அபிநய சதங்கை நடனமும் இடம் பெறும்.

அதன் பின்னர் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் *பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்துவம் சாதகமானதா? பாதகமானதா?* எனும்தலைப்பில்சிறப்புபட்டிமன்றம்நடைபெறும். அத்துடன் கலைஞர்கள் கௌரவிப்பும். பாஷையூர் சென். அன்ரனீஸ் கலைக்கழகம் வழங்கும் வீரபாண்டிய கட்டப்பொம்மன் தென்மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறும். (2)

## பௌர்ணமிவிழா

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்மணி விழா இன்று புதன்கிழமை மாலை 7 மணிக்கு இந்நிலையைத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் பு.நாகமுத்து கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் வைத்திய கலாநிதி இ. கௌரிபாலன் *ஆன்மீகமும் ஆனந்தமும்* எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (2)

## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

யாழ்.மாநகரசபை சைவசமய விவ காரக் குழு 2014 ஆம் ஆண்டுக்கான 22 ஆவது மலருக்கு ஆக்கங்கள் கோரப் படுவதாக சைவ சமய விவகாரக் குழு தலை வரும் மாநகர சபை ஆணையாளருமான செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கட்டுரைகள் 5 தொட க்கம் 7 வரையான பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும். அத்துடன் ஏற்கெனவே மலரில் வெளிவந்த கட்டுரைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆக்கங்களை அனுப்பும்போது இடதுபக்க மேல் மூலையில் நல்லைக் குமரன் மலர் 22 எனக் குறிப்பிட்டு பிரதம பதிப்பாசிரியர், நல்லைக்குமரன் மலர் 22, இல.21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். எனும் முக வரிக்கு எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மின்னஞ்சல் மூலம் அனுப்ப விரும்புவோர் nallaivijayan@yahoo.com என்றமின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க லாம்.

அத்துடன் கட்டுரைகளை இறு வட்டுக்களில் அனுப்புவது சிறந்த தாகுமென யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## 31 ஆம் நாள் நினைவு ஆராதனையும் மதிய போசன அழைப்பும்

அமரர் செல்லர்-தேவராசா (C.T.B)
(லாசரஸ்) (எக்காளத்தொனி ஊழியர்)

மண்ணில் 31.04.1942
விண்ணில் 14.04.2014



திங்கள்
ஒன்று சென்றும் தேடுகின்றோம்
உம்மை தேடுகிறோம்
வறுமையிலும் செம்மையாய் வாழவைத்த
எம் ஒளி விளக்கைத் தேடுகின்றோம்
மெழுகாய் உமை உருக்கி
விருட்சமாய் எமை வளர்த்த
உமை தேடுகிறோமையா!
தந்தையே உங்கள் அன்பான
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், உடன் பிறப்புக்கள்
இனிய பேரப்பிள்ளைகள்
உறவுகள் அனைவரும் உமை தேடுகிறோம்
உம் கரம் தொட்டு சுகம் பெற தேடுகிறோம்
தந்தையே! உங்கள் உணர்வுகளின்
வெளிப்பாடுகளிற்காய்
மேய்ப்பனற்ற மந்தைகளாய் நாம்
என்றென்றும் உங்கள்
நினைவுடன்

குடும்பத்தினர்
சமரபாகு, கம்பர்சோலை, வல்வெட்டித்துறை.

(க-7356)

## இராசி பலன்

**14.05.2014**
(சித்திரை 31, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பூரணை பின்னிரவு 1.05 மணிவரை
சுவாதி முற்பகல் 7.33 மணிவரை
இராகுகாலம் 11.53- 1.23 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

**மீனம்** பிறருடைய வேலைகளை நீங்கள் எடுத்துச் செய்யும் சூழ்நிலை உருவாகும், கௌரவக்குறைவான நாள், முயற்சிகள் தாமதமாகும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடி வெடுப்பீர்கள், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** உறவினர் வழியில் இனிய தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் நலன்கருதி சுப செலவுகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சொத்துக்களால் ஆதாயமுண்டு, விருந்தினர் வருகையுண்டு, எதிர்பாராத பயணங்கள் கைகூடும்.

**கடகம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், தொல்லை கொடுத்த சிலரே தோள்கொடுத்து உதவ முன்வரலாம்.

**மகரம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், ஆரோக்கியமான நாள், எதிர்பாராத நேரத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** பொதுவாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உறவாடுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்.

**தனுசு** இலட்சியப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, முயற்சியில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அலைய நேரிடலாம், சஞ்சலங்கள் கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகள் தாமதமாகும்.

**துலாம்** உறவினர் நலன்கருதி கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பலனுண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், மாதர் நட்புண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் கொள்வனவு விலையை நெஸ்லே நிறுவனம் அதிகரிக்க வேண்டும் பால் வியாபாரிகள் கோரிக்கை

(உடுப்பிட்டி)

யாழ்.மாவட்டத்தில் பால் வியாபாரிகளிடமிருந்து பால் கொள்வனவு செய்வதில் பல நிறுவனங்கள் ஈடுபட்ட போதும் கொள்வனவு விலையில் வித்தியாசம் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவத்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து யாழ்.கோபால் நிறுவனம் தனது கொள்வனவு விலையை லீற்றருக்கு 58 ரூபாவாக அதிகரித்துள்ள போதும் நெஸ்லே நிறுவனம் தனது கொள்வனவு விலையினை இன்னும் அதிகரிக்கவில்லை என பால் வியாபாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்பொழுது நெஸ்லே நிறுவனம் விலையை லீற்றருக்கு 48 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை கொள்வனவு செய்கின்றது.

இதில் பாலின் கொழுப்பின் தன்மைக் கேற்ப அதன் விலை மாறுகின்றது.

யாழ்கோ நிறுவனத்துடன் ஒப்பிடும் போது நெஸ்லே நிறுவத்தின் பாலின் விலை 10 ரூபாவினால் வீழ்ச்சியான நிலையிலேயே காணப்படுகின்றது.

இதனால் நெஸ்லே நிறுவனத்திற்கு பால் விற்பனை செய்யும் பால் வியாபாரிகள் தமக்குரிய கொள்வனவு விலை போதாது என்று தெரிவித்துள்ளனர்.

எனவே நெஸ்லே நிறுவனமும் தனது கொள்வனவு விலையினை அதிகரிக்க வேண்டுமென பால் வியாபாரிகள் நெஸ்லே நிறுவனத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-52)




நன்றி-ஐலண்ட்

# பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி இமையாணன் துவாளி கண்ணகை அம்மன் கோவிலின் பூங்காவன சிறப்பு நிகழ்வாக யாழ் பட்டி மன்றக் குழுவினர் வழங்கும் சிறப்பு பட்டிமன்றம் நாளை வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சொல்வேந்தர் பொன் சுகந்தன் தலைமையில் மேற்படி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. பட்டிமன்றத்தின் தலைப்பாக மகிழ்ச்சிகரமான வாழ் விற்கு பெரிதும் துணை நிற்பது பணமா குணமா என்ற விடயமே பேசப்படவுள்ளது. (2)




# சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினுள் வாகனங்களை நிறுத்த புதிய நடைமுறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் ஏ9 வீதி இரு பக்கங்களில் தினமும் வாகனங்கள் நிறுத்துவதால் பொது மக்கள் எதிர் நோக்கும் போக்குவரத்து சிரமங்களை மக்கள் தவிர்ப்பது தொடர்பில் சாவகச்சேரி நகராட்சி மன்ற மாதாந்த கூட்டத்தில் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நவீன சந்தை தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வரையான வீதியின் இரு மருங்கிலும் வாகனங்களை ஒன்ற விட்டு ஒருநாள் நிறுத்துவதற்கு சபையின் உப தவிசாளர் கு.சதாசிவமூர்த்தி சமர்ப்பித்த பிரேரணை விவாதத்தின் பின் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்பிரகாரம் சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாகவுள்ள வர்த்தக நிலையங்களின் எதிர்ப்புற வீதியின் மறுபக்கத்தில் தினமும் வாகனங்களை நிறுத்தவும் கொமர்சல் வங்கி தொடக்கம் ஆதார வைத்தியசாலை வரையான ஏ9 வீதியில் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் ஒரு பக்கமாகவும், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் அதற்கு எதிர்ப்பக்கமாகவும் வாகனங்களை நிறுத்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை ஜுன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பான அறிவிப்பு பலகைகளை அவ்விடங்களில் காட்சிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-29)

## பௌர்ணமி தின கருத்தரங்கு

(சாவகச்சேரி)

மீசாலை உயர்கலைக் கல்லூரியின் பௌர்ணமி தின கருத்தரங்கு இன்று புதன்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கானது க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி அரசியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்கும் மாணவர்களுக்காக நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கில் சிறு கட்டணங்களுடன் யாழ்ப்பாண பாடசாலை மாணவர்கள்பங்கேற்கமுடியும்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாணவர்கள் இலவசமாக பங்குபற்றமுடியும் என கல்லூரி நிர்வாகத்தி னரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறவிருக்கின்ற கருத்தரங்கானது இக்கல்லூரியில் நடத்தப்படுகின்ற ஒன்பதாவது கருத்தரங்கு என்பதும்குறிப்பிடத்தக்கது. (2-29)

## சித்திராப்பௌர்ணமி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயநிர்வாகத்தினர் இணைந்து நடத்தும் பௌர்ணமி விழா இன்று பிற்பகல் 5 மணிக்கு கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.அனந்த லெட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி.சாந்தி நாவுக்கரசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சித்திராப்பௌர்ணமிவிரதமகிமை எனும் தொனிப்பொருளில் சைவப் புலவர் கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவொன்றை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறும். (2)

# வடமராட்சி தெற்கு மேற்கு வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி.அ.தியாகேஸ்வரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய மண்டான் பொதுச் சந்தை திருத்த வேலைகளுக்காகவும் வல்வை பொது மயானத்தின் வேலைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.அத்துடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளின் திருத்த வேலைகளுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நெல்லியடி கிழக்கு முடைக்காட்டு வீதி, கரவெட்டி வடக்கு சரஸ்வதி வித்தியாலய வீதி, துன்னாலை ஆட்டுப்பட்டி வீதி போன்ற வீதிகளே திருத்தப்படவுள்ளன.

மேலும் கரணவாய் முதலைக்குளி மக்களின் குடி தண்ணீர் அபிவிருத்தி திட்டத்திற்கு மாத்திரம் 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-60)



*கரவெட்டி அம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு நெல்லியடி சம்பத் வங்கி கிளையினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதன் போது கிளை முகாமையாளர் மாக்சம் விஜேந்திரா மாமரக்கன்றினை நாட்டி தண்ணீர் ஊற்றுவதனை படத்தில் காணலாம். (படம்: கரணவாய் செய்தியாளர்)*

# யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் திருக்குறள் கருத்தரங்கு இன்று

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள திருக்குறள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பிற்கு அருகில் உள்ள யூரோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 'திருக்குறள் கூறும் அறிவியல் பார்வை' எனும் பொருளில் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனின் நெறிப்படுத்தலில் கருத்துரைகள் இடம் பெறவுள்ளன.

திருக்குறளில் பொறியியல் என்ற பொருளில் எந்திரி மு.தில்லைநாதனும் திருக்குறளில் பொருளியல் என்ற பொருளில் யாழ். தமிழ்ச் சங்க உபதலைவர் மா.சின்னத்தம்பியும் திருக்குறளில் மருத்துவம் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் க.சிவபாலனும் திருக்குறளில் முகாமைத்துவம் என்ற பொருளில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத தலைவர் பேராசிரியர் தி.வேல நம்பியும் திருக்குறளில் சட்டம் என்ற பொருளில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசுவும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

யாழ். தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் விரிவுரையாளர் ச.லலீசன் நிறைவுரையை நல்குவார். (2-23)

# ஆளுநர் தேர்தலில் வெற்றி பெற்றார்

(நல்லூர்)

சர்வதேச ரீதியில் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்ட உப ஆளுநர் தேர்தல் போட்டியில் யாழ். போதனா லயன்ஸ் கழனத்தினைச் சேர்ந்த வைத்திய கலாநிதி வை.தியா கராஜா 56 மேலதிக வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் டி 1 இற்கான மகாநாட்டை கொழும்பு சர்வதேச பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதி நடத்தியது.

இதன்போது உப ஆளுநர்தெரிவு செய்வதற்கான தேர்தல் போட்டியும் இடம் பெற்றது.

இதன் போதே இவர் தெரிவானார். (2-134)

# கரவெட்டி கோவிற்சந்தையை புனரமைப்பு செய்யுங்கள்

## வியாபாரிகள் கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி கோயிற் சந்தைக் கட்டடத் தொகுதியில் நிலம் வெடிப்புக்களுடன் காணப்படுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தைத் தொகுதி கட்டடம் கடந்த இரு வருடங்களாக திருத்தம் செய்யப்படவில்லை.

அத்துடன் குறித்த சந்தையின் பொது மலசலகூடம் சேதமடைந்த நிலையில் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சந்தையில் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இதனால் வியாபாரிகள் குடிநீர் பெற்றுக்கொள்ள கடை வாசலில் காத்து நிற்கின்றனர்.

இத்தேவைகளை நிறைவேற்றுமாறு கரவெட்டி பிரதேச சபைக்கு பலமுறை கோரிக்கை விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் இது வரைக்கும் எடுக்கப்படவில்லையென வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே குறித்த பிரச்சினைகளை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து சீர்செய்யவேண்டுமென வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

### *Diploma in Human Resource Management- 2014*

Applications are invited from eligible candidates for registration of the above course to be conducted by the Faculty of Management Studies & Commerce.

***Duration of the Course-*** One Year (weekends)

***Medium of instructions-*** Tamil

***Admisiion Requirements-*** Candidate must possess three passess in G.C.E. (A/L) Examination.

***Fees-*** Programme fee will be Rs.29,000/=

Including

| | |
|---|---|
| Registration- | 1,500.00 |
| Tuition fees - | 22,500.00 |
| Examination fees- | 5,000.00 |
| Total | 29,000.00 |

***Closing Date*** of Application- 10.06.2014

***Application forms***

Application form could be obtained from the Dean's Office, Faculty of Management Studies & Commerce on a payment of Rs.250.00 at the People's Bank- Jaffna University Branch. Duly filled application should be forwarded on a before ***10.06.2014*** to the ***Coordinator, Diploma in HRM, Faculty of Management Studies & Commerce, University of Jaffna.*** Please write ***"Application for Diploma in Human Resource Management"*** on the top left side of the envelop.

**Registrar**
**University of Jaffna.**

(C-7354)

## நுண்ணியல் டிப்ளோமாக் கற்கைநெறிக்கான மூன்றாம் அரையாண்டுப் பரீட்சை-மே 2014

2014 ஆம் ஆண்டு மே மாதம் 17, 18, 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சைகள் 2014 ஆம் ஆண்டு மே மாதம் 24, 25, 31, ஜூன் 01 ஆகிய திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளது என பீடாதிபதி அறிவித்துள்ளார்.

நேரசூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

பதிவாளர். (C-7360)

## இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக விழா-2014

**தலைவர்**
**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**

**14.05.2014 இரண்டாம் நாள்**

**(63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.) நேரம் பி.ப. 4.00**

**பிரதம விருந்தினர்**
**பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள்**
(முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

+ நாச்சிமார் கோவிலடி சபேசன் குழுவினர் வழங்கும்

**மங்கல இசை**

**நாதஸ்வரம்**
திரு.மாணிக்கம்சபேசன்
திரு.முருகையா ரமேஸ்

**தவில்**
திரு.நடராஜா வினோதன்
திரு.கண்ணன் முரளி

+ மங்கல விளக்கேற்றல்
+ *தேவாரம்:* செல்வன் ஜெகதீஸ்வரன் மதுஷிகன்
+ *ஆசியுரை:* மௌலவி அப்துல் அசீஸ் (காசிமி)
(தலைவர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, யாழ்/ கிளிநொச்சி மாவட்டம்)
+ *வாழ்த்துரை:* திரு. L இளங்கோவன் (செயலாளர், வடக்குமாகாண ஆளுநர் செயலகம்)
+ **சைவச்சிறுவர் இல்ல மாணவர்கள் வழங்கும்**

**காவடி**

+ G. நக்கீரன் குழுவினர் வழங்கும்

**வேணுகான இசை**

*புல்லாங்குழல்:* திரு.G.நக்கீரன் — *வயலின்:* திரு.அ.ஜெயராமன்
*மிருதங்கம்:* திரு.K.அனந்தகோபன் — *முகர்சிங்:* திரு.க.நந்தகுமார்
*தபேலா:* திரு.பிரபாகரசர்மா

+ *புஷ்பாஞ்சலய* நடன சபா மாணவிகள் வழங்கும்

**அபிநய சதங்கை**

*நட்டுவாங்கம்:* செல்வி ரஜிதா சின்னத்துரை — *பாட்டு:* திரு.S. அமிர்தசிந்துஜன்
*வயலின்:* திரு.அ.ஜெயராமன் — *மிருதங்கம்:* திரு.க.நந்தகுமார்

+ **பட்டிமன்றம்**

**பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்துவம் சாதகமானதா? பாதகமானதா?**

**தலைவர்**
**பேராசிரியர் T.வேல்நம்பி அவர்கள்** (தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்)

+ கலைஞர்கள் கௌரவிப்பு + பிரதம விருந்தினர் உரை
+ பாசையூர் சென். அன்ரனீஸ் கலைக்கழகம் வழங்கும்

**வீரபாண்டிய கட்டப்பொம்மன்**
**தென்மோடி நாட்டுக்கூத்து**

+ நன்றியுரை

**அனுசரணை: கிருபா லேணர்ஸ்**
**Proprietor A.Kirubaharan,**
**T.P. 0777225292,**
**021 222 4353, 021 492 3200**

**228, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(6375)

## தமிழ்ப் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய மாநாடு

இலங்கைத் தீவில் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட வன்முறை பற்றிய மாநாட்டை பிரித்தானிய தமிழர் பேரவையும், தமிழர்களுக்கான அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவும் இணைந்து நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணி தொடக்கம் 8 மணிவரை பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடத்தியது.

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக இலங்கை இனவாத அரசுகளினால் கட்டமைக்கப்பட்ட ரீதியான பாலியல் வன்முறைகள் தொடர்ச்சியாக இலங்கை இராணுவத்தினரால் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இறுதி யுத்த காலப்பகுதியில் பாதிப்புகளுக்கு உள்ளாகியோர், சட்டத்தரணிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வன்முறைகள் சம்பந்தமான ஆய்வாளர்கள் ஆகியோரிடம் தமது துன்பத்தை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை பிரித்தானிய தமிழர் பேரவையினர் ஏற்படுத்தியுள்ளனர் என தெரிய வருகின்றது.

இத்துடன் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி நடைபெற இருக்கும் நினைவு கூரல் நிகழ்வில் பிரித்தானிய வாழ் அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொண்டு மீண்டும் ஒருமுறை சர்வதேசத்திற்கு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறையை உரக்கக் கூறுவோம் என தெரிவிக்கப்பட்டது. (2)

## கணித பாடத்தில் சித்தியெய்தாமை குறித்து ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியெய்தாமை குறித்து ஆராய்வதற்கு பத்து பேர் அடங்கிய ஆணைக்குழு ஒன்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவினால் நேற்று முன்தினம் நிறுவப்பட்டது.

சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் இலட்சக்கணக்கான மாணவர்கள் சித்தியடைவதில்லை.

மாணவர்கள் கணித பாடத்தில் பின்னடைவை எதிர்நோக்குவதற்கான காரணங்களை கண்டறிந்து 60 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊவா வெல்லஸ்ஸ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் இந்த ஆணைக்குழுவின் இணைத தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடையவில்லை எனவும் இதனால் அவர்களினால் உயர்கல்வியைத் தொடர முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 17
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L / இணைப்பாளர்
தொ.இ: B/3104

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 20.75 செவ் 4 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L / தச்சுவேலை
தொ.இ: B/3110

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 38 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BAC / வியாபாரம் (UK)
தொ.இ: B/3111

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: 3.75
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: B/3115

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 28 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L / வங்கியாளர்
தொ.இ: G/3101

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா: 35.75 சூரி செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc in ICT / DEMO
தொ.இ: G/3102

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 22.5
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்
தொ.இ: G/3103

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 28 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, BA - Following
தொ.இ: G/3105

## கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E.mail:- kalyanamalai.jaffna@gmail.com
எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மூடியது அநீதியான செயற்பாடு

## அமைச்சர் வாசுதேவ

(கொழும்பு)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மூடியது அநீதியான செயற்பாடாகும். விடுதலைப்புலிகள் அமைப்பை முதன்மைப்படுத்தாது தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர் நீத்தவர்கள் எனக் கூறும் உரிமை தமிழ் மக்களுக்கு உள்ளது என்று அரசின் பங்காளிக்கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண ஆளுநராக மீண்டும் படைத்தரப்பைச் சார்ந்தவரை நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை எதிர்ப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுகிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மூடப்பட்டது அநீதியான செயற்பாடாகும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும்.

எனவே அவ்வாறான அமைப்பின் உயிரிழந்தவர்களை நினைவுகூருவது சட்ட விரோதமாகும்.

இதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மூடுவது பதிலாக அமையாது.

விடுதலைப் புலிகளை பல்கலைக்கழகத்தில் நினைவு கூருவதை தடை செய்து உத்தரவு பிறப்பித்திருக்கலாம் அதைவிடுத்து பல்கலைகழகத்தை மூடியது அநீ தியாகும்.

இதேவேளை, இராணுவ மற்றும் பொலிஸ் பேச்சாளர்கள் யுத்தத்தில் இறந்த உறவுகளை நினைவு கூர்ந்து மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லையென்றும் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவு கூருவதையே தடை செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளை முதன்மைப் படுத்தாது தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர் நீத்தவர்கள் என தீர்மானம்எடுக்கும்உரிமை அதனை வெளிப்படுத்தும் உரிமை தமிழ் மக்களுக்கு உள்ளது. இதற்கு தடை போட முடியாது.

வட மாகாண சபை ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியே தற்போது பதவி வகிக்கின்றார்.

இதனோடு எமக்கு உடன்பாடு கிடையாது. எனவே புதிதாக வட மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளவரும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர் ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, சிவிலியன் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும்.

ஆளுநர் நியமன விடயம் தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரனோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டோடு ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும்.

வட மாகாண சபை செயலாளர் பொலிஸ் அத்தியட்சகர் போன்றோர் நியமிக்கப்படும் போது மாகாண முதலமைச்சரோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டோடு இப் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் என்றே அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ளன.

ஆனால் மத்திய அரசாங்கமோ இதனை பின்பற்றுவதில்லை. இது கவலைக்குரிய விடயமாகும்.

எதிர்க்கட்சிகள் இன்று ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு வேட்பாளர் எவருமின்றி குழம்பிப் போயுள்ளன.

அந்தளவுக்கு வங்கு ரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட நிலையிலேயே பொது வேட்பாளரைத் தேடுகின்றனர்.

பொது வேட்பாளராக முதலமைச்சர் விக்னேஸ்வரன் நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்துகள் கோமாளித்தனமானவை என்றார். (2)

## மதுபானங்களுடன் இருவர் கைதாகினர்

வெசாக் வாரம் கொண்டாடப்படுவதால், மதுபான போத்தல்களை சட்ட விரோதமாக தோட்டப்பகுதிகளுக்கு விற்பனை செய்ய முயற்சித்த இருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படியே விரைந்து சென்ற பொலிஸார் முச்சக்கரவண்டியை சுற்றி வளைத்து விசாரணை மேற்கொள்ளும் போது இவ்வாறு மதுபான போத்தல்கள் கொண்டு சென்றமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரையும் கைது செய்துள்ளனர். (2)

## கார் விபத்தில் சிறுமி உயிரிழப்பு

வத்தளையிலிருந்து பொகவந்தலாவ நோக்கி சென்ற கார் ஒன்று விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்

கினிகத்ஹேன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில், களனி கங் கையை அண் மித்த பகுதியில் வீதியை விட்டு விலகி 100 அடி பள்ளத்தில் கார் பாய்ந்ததில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இவவிபத்தில் 8 வயது சிறுமி உயிரிழந்துள்ளதோடு மேலும் காயமடைந்த ஆறுபேர் கிதுல்கல தெலிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொகவந்தலாவில் நடைபெறவிருந்த கல்யாணத்திற்காக மாப்பிள்ளையை அழைத்து வந்த குடும்பம் என கினிகத்ஹேன பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 90 | 120 |
| தக்காளி | 140 | 140 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 50 | 50 | 60 |
| கரட் | 70 | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 | 60 |
| புடோல் | 60 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 100 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 70 | 140 | 80 | 80 |
| லீக்ஸ் | 50 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 120 | 80 |
| போஞ்சி | — | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 40 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 125 | 140 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 35 | 30-35 |
| இராசவள்ளி | 70 | 100 | 100 | 80 |

## பொலிஸ் கான்ஸ்டபிள் குத்திக் கொலை

அளுத்கம பொலிஸ் நிலையத்தில் சேவை பரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கூரிய ஆயுதத்தால தாக்கி கொல்லை செய்யப்பட்டுள்ளாா.

வெலிபென்னெ மீகம பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இக்கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அளுத்கம பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக ஏற்பட்ட மோதலில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2)

## மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் - ஜனாதிபதி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கு அருகாமையில் போதைப் பொருள் விற்பனை செய்யும் நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி. பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பாடசாலை அருகாமையில், பாடசாலைகளுக்கு உள் இடம் பெற்று வரும் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் கப்பம் கோரல்கள் தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

நாட்டின் பிரதான நகரங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்களை போதைப் பொருள், பாபுல், போதை மாத்திரை போன்றவற்றுக்கு அடிமையாக்கும் திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, புரிந்துணர்வின் அடிப்படையிலேயே சுற்றாடலை பாதுகாக்க முடியும் என்றார். (2)

## facebook (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 13

### சானு சானுகா



கணவரின் மருத்துவ செலவுக்காக மரதன் ஓட்ட பந்தயத்தில் கலந்து வெற்றி பெற்ற 61 வயது பாட்டி...!

### இந்துஜா காந்தரூபன்



### றுபீனா திலக்




Like.Comment...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA



# உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டு எண் 01 இன் பலன்கள்

01

### தோற்றம்

பிறந்த எண்ணிலும் கூட்டு எண்ணிலும் சூரியன் ஆதிக்கம் வருவதால் நல்ல உயரமான, ஒல்லியான உடல், சிவப்பான நிறத்திலிருக்கும். கண்களும் சிவந்து காணப்படும். முடி சுருள் சுருளாக நீண்டிருக்கும். நல்ல கருநிறமிருக்கும். தோற்றத்தில் கவர்ச்சியும், மிடுக்கும், பேச்சில் துடுக்குத்தனமும் உண்டாகியிருக்கும்.

### குணம்

மானத்தை உயிர் என மதிப்பர். வாக்குத் தவற மாட்டார். கருணை இருக்கும். பெருந்தன்மையுடன் நட்பை மதித்து நன்றி மறவாதிருப்பர். அடக்கியாளும் தன்மை, சுயேச்சையான போக்கு கொண்டிருப்பர். வைராக்கியம் மிக்கவர். பகைக்குப் பணிய மாட்டார். பிறரைக் கெடுக்கவும், ஏமாற்றவும், பிறர் பொருளை அபகரிக்கவும் எண்ண மாட்டார். சுறுசுறுப்பாக இருப்பர். திட்டமிடல், செயற்படல் இரண்டும் இவர்களிடம் இருக்கும். முகத்துதிக்கு ஆசைப்பட்டு மயங்கு வர். புகழாசையில் மயங்குவர். படாடோப மாகப் பிறர் கண்ணை உறுத்துவது போன்ற வாழ்க்கை நடத்துவர். கலை ஈடுபாடும், திறமையும் இருக்கும். தொழில் திறமையுடனிருப்பர். நன்கு நிர்வகிக்கும் சாமர்த்தியமிருக்கும். மட்டமான காரியங்களில் தலையிட மாட்டார். எதிலும் முதன்மை பெற்றிருக்க முயலுவர். அன்பிற்கு ஏங்குவர். பிடிவாதம் கொண்டிருப்பர்.

### குடும்பம்

காதலில் ஈடுபடுவர். காதல் மணம் யாருக்கும் அஞ்சாமல், எதற்கும் கவலைப்படாமல் செய்து கொள்ளுவர். நண்பர்களை யும் விரும்புவர். சமூகம் அதிசயிக்கும்படி தனிப்பட்ட வாழ்க்கை நடத்துவர். மனைவி, உற்றார், உறவினர்களுடன் கொள்கை ரீதியாக மோதித் தனிப்படவும் செய்வர். மன்னைவி நன்கமைவார். இவ்வெண் பெண்கள் கணவர் சரிவர அமையப்பெறமாட்டார். ஆணைப்போல வாழ்வர். இவ்வெண்காரர்கள் மிகவும் கறாராக இருப்பாராதலால், நண்பர் நீடித்து உடனிருக்க மாட்டார். மனைவி, கணவர், பிரிந்து விடுவதும் நிகழும். குடும்பத்தில் கூடியிருப்பவரும் பயந்தபடி ஒட்டாமல் இருப்பர்.

### தொழில்

அரசியலில் இருப்பர். அரசாங்கப் பதவிகளில் நிலைப்பர். சொந்தத் தொழிலிலும்



விளங்குவர். உழைப்பார் உயரக் கூடிய இலக்குமி புத்திரர். மின்சாரம், பணம் தொடர்பான நிறுவனங்களில் பெரிய பதவிகளில் இருப் பர். நகை, பொன், இரத்தின வியாபாரம், இயந்திப்பொறியாளர், நடிகர், மக்கள் தலைவர், ஆன்மிகத் தலைவர் என எதிலிருந்தாலும் பெரிய அதிகாரப் பதவிகளிலிருப்பர். அறக்கட்டளைத் தலைவர், அமைச்சர்களின் காரியதரிசி என பல அதிகாரப் பதவிகளிலும் இருப்பர்.

### நோய்

வெப்பம் உள்ள உடல் என்பதால், ரத்த உயர் அழுத்தம், ரத்தக் கட்டி, மூலம், சர்க்கரை வியாதி, தலைவலி, கண் கோளாறு இவை வந்தால் எளிதில் நீங்காது.

# உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டு எண் 02 இன் பலன்கள்

### தோற்றம்

சூரியனில் சந்திரனாதிக்கம் கொண்ட இவர் சூரியன்படி தோற்றமும் சந்திரன்படி மனமும் முன்னேற்றமும் அடைபவராவார். நடுத்தரமான உயரமும், உறுதியான உடலும் உள்ள இவர்கள் சஞ்சலம் கொள்ளும் மனமுள்ளவர். உடல் தோற்றம் அழகாக அமைந்திருக்கும். தலை நிறைய முடி இருக்கும். சீக்கிரம் வழுக்கை விழும். கண்ணாடி போடுவர். உடலில் நீர் கொள்ளும். மென்மையாயிருக்கும் கண்கள் பெரிதாக சிறிது கன்னம் சதைப்பிடிப்பாக இருப்பர்.

### குணம்

கவர்ச்சியாகப் பேசுவார். உதாரணமும், கதையும் பேச்சில் இடம் பெற, கேட்பவர் மயங்கித் தலையாட்டுவார். மனம் இருந்தால் பேசுவர். இல்லாவிடில் மௌனமாயிருப்பார். தம் கருத்தைப் பிறரிடம் திணி த்து விடுவார். பிறருக்கு யோசனை சொல்லும் இவர் தாம் குழம்பித் தவிப்பார். அழுத்தமும் ரகசியமும் மனத்தில் உள்ளவர். தந்திரமாக நடப்பர். நன்றாக படிப்பர். பட்டம் பெற்றிடுவர். இரைந்து பேசுவர். அரட்டையடிக்க ஆள் வேண்டும். பிறரை ஏமாற்றவும் செய்வர். தாமும் ஏமாறுவர். தம் மடத்தனத்தை மறைத்து விடுவர். பெண்களை விரும்புவர். ஆனால், அவர்களால் தொல்லைப்படுவர். பெண்களுக்காக அதிகம் சிரமப் படுவர். பிறருக்கே உழைப்பர். தாம் செய்ய வேண்டியதில் மறதி கொள்வர். ஒப்புக்கொண்ட வேலையில் மனம் ஒன்றாது. பாதியில் விடுவர். சந்தேகம் வரும். அச்சம் உண்டு. வீண் கவலை கொண்டிருப்பர். தெய்வபக்தி இருக்கும். தேச பக்தி இருக்கும். வாய் ஜம்பமும் அடிப்பர். கலை சம்பந்தமானவை பிடிக்கும். சகிப்புத்தன்மை இருக்கும். காதல் தோன்றி வாட்டும். தன் காரியத்தை சாதித்துக் கொண்டு விடுவர். தாமும் குழம்பிப் பிறரையும் குழப்பி விடுவர். விளையாட்டுகளை விரும்புவார். கற்பனையில் ராஜ்ஜியம் ஆளுவர். விருப்பு-வெறுப்பு நிறைய இருக்கும்.

### குடும்பம்

இவர்களுக்குப் பெற்றவர்கள் ஆதரவு பூரணமாக அமையாது. அல்லது யாராவது உறவினரிடம் வளர்ந்தவராக இருப்பர். இளம் பருவத்திலேயே இவர்களுக்கு தொல்லைகள் ஏற்படும். பல ஊர்களுக்கு மாறுதல், பல பள்ளிக் கூடங்களைப் பார்த்தல், வளர்ப்போரின் ஓர வஞ்சனை இப்படி சிரமங்களேற்படும். வறுமையிலும் வளமையிலும் மாறி மாறி வளர வேண்டியது வரும். கல்வித் தடை உண்டாகலாம். தொழிலமையும். சொந்த வருமானம் வரும். இல்வாழ்க்கை ஆதரவளிப்பதாக இராது. ஏதாவதொரு பிரச்சினை உண்டாகும். குடும்பத் தில் ஒற்றுமை நிலையாக ஏற்படாது.

### தொழில்

கம்பெனிகளில் வேலை அமையும். சூரியன் ஆதிக்கம் பலமாக இருந்தால் அச்சு வேலை கிடைக்கும். புகைப்படத் தொழில், டிசைன் வேலை, தையல், போதைப் பானக் கடை நடத்தலாம். வசதியான சூழ்நிலையில் பிறந்தவர் வக்கீலாகலாம். அக்கினி, மின்சார சம்பந்த வேலைகளிலும் இருக்கலாம். கற்பனை தேவைப்படும் தொழில்களிலும், கலைகளிலும் சிறக்கலாம். பிறருடன் அனுசரித்துப்போக முடியாதென்பதால் பிரச்சினை தொழிலிலும் உண்டாகும். ஆனாலும், பணப்புழக்கம் குறையாது.

### நோய்

நரம்பு மண்டலப் பலவீனத்தால் தலை சுற்றல் இருக்கும். வயிறு வலியிருக்கும். பல் கோளாறு, மூட்டு வலி, முதுகு வலி உண்டாகும். உடலில் நீர் சேர்ந்து கோளாறுண்டாக்கும்.

கணித்தவர்-ஸ்வாமி-

(தொடரும்)

# ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வுகள் புலம்பெயர் தேசங்களெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் ஜேர்மனியின் பல்வேறு நகரங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் ஜேர்மனிய பிரதிநிதிகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை Muenster நகரில் தொடங்கிய நினைவேந்தல் நிகழ்வுகள்மறுநாள் திங்கட் கிழமை Dortmund நகரில் இடம்பெற்றுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு Von der bleiweiss Str 04, 90459 Nurnberg இடத்திலும், எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு Christian Lassen எனும் இடத்திலும், 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு Hellmann Str 10 , 70372 Stuttgart இடத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாரிசின் புறநகர் Bagneux நகரின் Blagis பகுதி சதுக்கத்தில் பிரெஞ்சு மக்களுடனான வணக்க வழிபாட்டு ஒன்றுகூடலொன்றும், அப்பகுதி தமிழ் சங்கத்தின் உறுதுணையுடன் தமிழீழத் தேசிய துக்க நாள் வணக்க நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் பொதுமக்கள் அனைவரையும் பங்கெடுத்து இழந்த மண்ணுக்கு, மக்களுக்கு வணக்கம் செலுத்துவதோடு, தமிழர்களுக்கான பரிகார நீதியினை அனைத்துலகத்திடம் உரக்க கோருவோம் என அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. (2)

# உயர் நீதிமன்றம் செல்வது குறித்து ஆராய்கிறது மருத்துவர் சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் சிகரெட் பக்கெட்டில் எச்சரிக்கை அறிவித்தல் தொடர்பில் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்வது தொடர்பாக ஆராய்வதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பின்படி சிகரெட் பக்கெட்டுக்களில் 50 தொடக்கம் 60 வீத எச்சரிக்கை அறிவித்தல் காண்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் சுகாதார அமைச்சு 80 வீத அறிவித்தலை கோரியே வழக்கை தாக்கல் செய்திருந்தது.

இந்நிலையில் பொதுமக்களின் நலன் கருதி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ய உத்தேசிப்பதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது. (2)

# க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான விசேட செயலமர்வை யாழ். கல்வி வலயம் கோட்ட ரீதியாக ஒழுங்கு செய்துள்ளது.

இதற்கமைய நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் யாழ். கோட்ட பாடசாலைகளுக்கு யா/ வைத்தீஸ்வரா கல்லூரியிலும் கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் காலை 8.30 மணி முதல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் அரசியல் விஞ்ஞானமும் 21,22 ஆம் திகதிகளில் வரலாறும் 26,27 ஆம் திகதிகளில் புவியியலும் அவ்வப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

எனவே பாடசாலை அதிபர்கள், மாணவர்களை இச்செயலமர்வில் பங்குபெற செய்யுமாறு யாழ். கல்வி வலயம் கேட்டுள்ளது. (அ)

# நாட்டின் சகல அபிவிருத்தி திட்டங்களும் கண்காணிக்கப்படும்

## ஐ.தே.க. தெரிவிப்பு

நாட்டின் சகல அபிவிருத்தித் திட்டங்களையும் கண்காணிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் சகல பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் கண்காணிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்,

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நுரைச்சோலை அனல் மின் நிலையம், சம்பூர் அனல் நிலையம், திருகோணமலை துறைமுகத் திட்டம் போன்ற அனைத்து அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கண்காணிப்பு செய்யப்படும்.

மீண்டும் ஒரு தடவை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு விஜயம் செய்யவுள்ளோம்.

மக்கள் பணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கண்காணிப்பு செய்ய வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமையாகும். பல்வேறு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கண்காணிப்புச் செய்யவுள்ளனர்.

கடந்த மாதம் அம்பாந்தோட்டை துறை முகம் மற்றும் மத்தள விமான நிலையத்தை ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றே சென்று பார்வையிட்ட போதிலும், எதிர் காலத்தில் அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த 25 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றே இவ்வாறான பகுதிகளைச் சென்று பார்வையிடவுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்தைப் பார்வையிட்ட ஐ.தே.க. பாராளு மன்ற உறுப்பினர் குழு அது தொடர்பிலான தமது இடைக்கால அறிக்கையை ஏற்கனவே ஐ.தே.க. தலைமைத்துவக்குழுவின்தலைவர கரு ஜயசூரியவிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

803



பிற்காலத்தில் நீங்கள் இருவரும் மன்னர்களாகத் திகழும் பொழுதும் சுதாமா ஒருவனால தான் உங்களைத் தோற்கடிக்க முடியும்!"

உடனே, இளவரசர்கள் இருவரும் சுதாமாவை அன்போடு கட்டிக் கொண்டு, "சுதாமா! எங்களுடைய உயிர் நண்பனாக இருந்த நீ, இன்று உண்மையாகவே எங்களுடைய உயிரை மீட்டுத் தந்துவிட்டாய்" என்று தழுதழுத்த குரலில் கூறினர்.

"நாம் என்றென்றும் இதேபோல் நண்பர்களாக இருக்க வேண்டும். வாருங்கள், குருகுலம் செல்வோம்!" என்று சுதாமா கூறி, அவர்களை அழைத்துச் சென்றான்.

தங்கள் குருவிடம் காட்டில் நடந்ததை அவர்கள் சொல்ல, குரு சுதாமாவைப் பெரிதும் பாராட்டினார்.

சில் ஆண்டுகளில் அவர்களுடைய கலவி முடிவடைந்தது. சுதாமாவைத் தனியே அழைத்து, "நைமிகாரண்யத்தில் என்னுடைய குரு வித்யாசரண் இருக்கிறார். அவரிடம் சென்று மேலும் சில ஆண்டுகள் கல்வி கற்பாய்!" என்று அவனை வாழ்த்தி அனுப்பி வைத்தார். ஜெயனும், விஜயனும் குருவை வணங்கி விட்டுத் தங்கள் ராஜ்யத்திற்குத் திரும்பிச் சென்றனர்.

அரண்மனையில் தங்கள் தந்தையிடம் தங்கள் குருகுல வாழ்க்கை பற்றியும் தங்களுடைய நெருங்கிய நண்பன் சுதாமாவைப் பற்றியும் விவரமாகக் கூறினர். தாங்கள் ஒருமுறை நாகத்தினால் தீண்டப்பட்டு உயிர் இழந்ததையும், தங்களை சுதாமா உயிர் பிழைக்கச் செய்ததையும் கூறினர். அதைக் கேட்ட மன்னர் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தார்.

பிறகு, தன் மகன்கள் இருவரையும் நோக்கி, "பிள்ளைகளே! என்னதான் சுதாமா தங்களுக்கு மறுவாழ்வு அளித்த உத்தமன் ஆனாலும், அவனால் மட்டுமே உங்களை வெல்ல முடியும் என்று நாகம் கூறியது எனக்குக் கவலையளிக்கிறது.

அத்தகைய சக்தி வாய்ந்த ஒருவனை நீங்கள் உங்கள் அருகே இருக்க அனுமதித்தால், உங்களுக்கு ஆபத்துதான். ஆகையால், அவனுடைய நட்பை மறந்து விடுங்கள்" என்றார்...........

(தொடரும்)

## நட்பின் மேன்மை!

வித்யாரண்யம் எனும் இடத்தில் இருந்த குருகுலத்தில் பல மாணவர்கள் பயின்று வந்தனர்.

அவர்களுள் சுதாமா என்ற மாணவன் அனைத்து மாணவர்களிலும் அறிவில் சிறந்து விளங்கினான்.

அவனைத் தன் மாணவனாக அடைந்தது பற்றி குருவித்யாபதி மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

சுதாமா மிக ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவன். அவனுக்கு ஜெயன், விஜயன் என்ற இரண்டு சகோதரர்கள் மிகவும் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர். சகோதரர்கள் இருவரும் அந்த நாட்டு மன்னரின் புதல்வர்கள்.

ஒருநாள், மூவரும் சேர்ந்து வனத்திற்குச் சென்றனர். ஹோமத்திற்கு வேண்டிய சமித்துகளைப் பொறுக்குவதில் ஈடுபட்ட சுதாமா இளவரசர்களை விட்டு விலகிச் சென்று விட்டான்.

ஜெயன், விஜயன் இருவரும் அம்பு எய்திப் பொழுதுபோக்கிக் கொண்டு இருந்தனர். அந்த சமயம் அருகிலிருந்த புற்றிலிருந்து ஒரு நாக பாம்பு வெளியே வந்தது. அதன தலையில் ஒரு இரத்தினம் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. இதைக் கண்ட இருவரும், அதன் மீது அம்பெய்தினார்கள். அம்புகள் குறி தவறின.

ஆனால் சீற்றங்கொண்ட நாகம் இருவரையும் தீண்டிவிட்டுப் புற்றுக்குள் சென்று மறைந்தது.

சற்று நேரங்கழித்து அந்தப்பக்கம் வந்த சுதாமா, தன் நண்பர்கள் இருவரும் உடலெங்கும் விஷம் பாய்ந்து இறந்து கிடக்கக் கண்டதும், துடிதுடித்துப் போனான்.

அந்தக் குறிப்பிட்ட புற்றில் வாசுகியின் வம்சத்தைச் சேர்ந்த நாகம் ஒன்று வசிக்கிறது என்று தன் குரு சொல்லக் கேட்டிருந்த சுதாமா, புற்றின் முன் அமர்ந்து இரு கரம் குவித்து நாகராஜனை வேண்ட ஆரம்பித்தான்.

"நாகராஜனே! அறியாமல் தவறிழைத்த இந்த இரு சகோதரர்களை தயவுசெய்து மன்னித்து அவர்களை உயிர் பிழைக்கச் செய்!



அவர்கள் இருவரும் இளவரசர்கள்! ஓர் இளவரசன் இறந்தால் அந்த நாட்டு மக்கள் அனைவரும் துன்புறுவர்! ஆகவே பொது நலம் கருதி, இவர்களை உயிர்ப்பிப்பாய்!" என்று வேண்டினான்.

அதைக் கேட்ட நாகராஜன் புற்றுக்குள்ளிருந்தவாறே, "அவர்கள் உன் நண்பர்கள் என்ற காரணத்தைக் கூறி நீ உயிர்ப்பிச்சை கேட்பாய் என்று நினைத்தேன். ஆனால் நீ பொதுநலத்தை முன்னிட்டு உயிர்ப்பிச்சை கேட்டாய். உனக்காக இவர்களுக்கு உயிர் தருகிறேன!" என்று கூற, சிறிது நேரத்தில் தரையில் விழுந்து கிடந்த இருவரும் உயிர் பெற்று எழுந்தனர்.

புற்றுக்குள்ளிருந்தவாறே அவர்களை நோக்கி நாகம் மீண்டும் பேசியது. "இளவரசர்களே! உங்களுடைய நண்பனின் வேண்டுதலின் பேரில் தான் நான் உங்களைப் பிழைக்க வைத்தேன்.

---

05.2014
14

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1264 - இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றி பிரான்சில் கைது செய்யப்பட்டான்.
- 1610 - பிரான்சின் நான்காம் ஹென்றி மன்னன் கொலை செய்யப்பட்டான். பதின்மூன்றாம் லூயி முடிசூடினான்.
- 1643 - பதின்மூன்றாம் லூயி இறக்க, அவனது 4-வயது மகன் பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனானான்.
- 1796 - பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியை எட்வர்ட் ஜென்னர் அறிமுகப்படுத்தினார்.
- 1811 - பராகுவாய் ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1861 - ஸ்பெயினில் பார்சிலோனாவில் 859-கிராம் எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்தது.
- 1879 - 463 இந்தியத் தொழிலாளர்களைக் கொண்ட முதலாவது தொகுதியினர் லியோனிடாஸ் கப்பலில் பிஜியை அடைந்தனர்.
- 1900 - கோடைக் கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பாரிசில் ஆரம்பமாகின.
- 1939 - பெருவைச் சேர்ந்த 5 வயது நிரம்பிய லீனா மெடினா உலகின் முதலாவது வயதில் குறைந்த தாயாக அறிவிக்கப்பட்டார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்து ஜேர்மனியிடம் சரண்டைந்தது.
- 1948 - இஸ்ரவேல் நாடு தன்னைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தி தற்காலிக அரசையும் அறிவித்தது. அரபு நாடுகள் இஸ்ரேலைத் தாக்கத் தொடங்கின.
- 1955 - பனிப்போர்: சோவியத் ஒன்றியம் உட்பட எட்டு நாடுகள் சேர்ந்து வார்சா ஒப்பந்தம் எனப்படும் தற்காப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1973 - ஸ்கைலாப் என்ற ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையம் சட்டர்ன் 5 விண்கப்பலில் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2004 - டென்மார்க்கின் முடிக்குரிய இளவரசர் பிரெட்ரிக், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த "மேரி டொனால்ட்சன்" என்னும் பெண்ணை திருமணம் புரிந்தார்.

**பிறப்புக்கள்**

- 1907 - அயுப் கான், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ. 1974)
- 1944 - ஜோர்ச் லூகாஸ், திரைப்பட இயக்குனர்
- 1948 - பொப் வூல்மர், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பாகிஸ்தான் துடுப்பாட்ட அணியின் பயிற்றுநர் (இ. 2007)
- 1953 - நொரொடாம் சிகாமணி, கம்போடியாவின் மன்னர்

**இறப்புகள**

- 1574 - குரு அமர் தாஸ், மூன்றாவது சீக்கிய குரு (பி. 1479)
- 1837 - ஆ. குமாரசாமிப்பிள்ளை (பி. 1784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

40

...ஒரு கணம் திகைத்தேன். வெள்ளைத் தாமரையாய் இருந்த மனசு கார்பன் தாளாய்க் கறுத்தது.

பிறகு நிதானமாய்ச் சிந்தித்தேன்.

நீ எனக்குச் செய்த நன்மைகள் மட்டுமே என் நினைவுக்கு வந்தன.

சினிமாக் கம்பெனிகளின் முகவரிகளே தெரியாத அந்த வெள்ளை நாட்களில் என்னை வீட்டுக்கு வந்து அழைத்துப் போவாயே! அதை நினைத்தேன்.

நான் கார் வாங்குகிற காலம் வரை உன் காரில் என்னை என் வீட்டில் இறக்கி விட்டுப் போவாயே! அதை நினைத்தேன்.

உன் வீட்டிலிருந்து உனக்காகக் காய்ச்சி அனுப்பப்படும் ஒரு கோப்பைப் பாலில் எனக்குப் பாதி கொடுக்காமல் எப்போதும் நீ அருந்தியதில்லையே! அதை நினைத்தேன்.

'ஆயிரம் தாமரை மொட்டுக்களே' பாடல் பதிவாகி முடிந்ததும் என்னைப் பரவசத்தோடு தழுவிக் கொண்டு என் கன்னங்களை வருடிக் கொண்டு அப்படியே புகைப் படக்காரரைப் படமெடுக்கச் சொன்னாயே! அதை நினைத்தேன்.

அந்த நினைவுகளின் இதமான உஷ்ணத்தில் உன் வக்கீல் நோட்டீஸ் எரிந்து போனது.

எனக்கு எதிராக உன் பெயரில் ஓர் அறிக்கை வருகிறது.

இருக்காதே என்று நினைக்கிறேன்.

பிறகு- நண்பர்களுக்குச் சொல்லி நகலைக் கைப்பற்றுகிறேன்.

உன் அறிக்கைதான்.

ஒரு பெண் வெட்கப்படுவது மாதிரி இருக்கும் உனது கையெழுத்தேதான்.

படித்தேன்; சிரித்தேன்; கிழித்தேன்; வேறொரு கோணத்தில் நினைத்தேன்.

உன் எழுத்தில் இந்த உஷ்ணம் இருந்தால் உன் இருதய அடுப்பில் எத்தனை விறகு எரிந்திருக்கும்!

உன் உள்ள உலை எத்தனை முறை




கொதித்திருக்கும்!

காரணமே இல்லையே.

இது இருதயத்திற்கு ஆகாதே.

எனக்கே தியானம் சொல்லித் தந்தவனாயிற்றே! இப்படி இருக்கக் கூடாதே.

என் இதயப் பறவை இறந்த காலத்தில் பறந்தது.

ஒருநாள் உனது வீட்டில் உன் தியான நேரத்தில் நீங்களும் தியானம் செய்யுங்கள் என்றென்னை அழைக்கிறாய்.

நான் சிரிக்கிறேன்.

என் ஒவ்வொரு கவிதையும் தவம்தான்; ஒவ்வொரு நல்ல பாடலும் தியானம்தான்.

பிறகு உன் வேண்டுகோளுக்காய்- விளையாட்டாய் உன்னோடு உட்காருகிறேன்.

கண்களை மூடி ஒரு சாமி பெயரைச் சொல்லி மனசை ஒருமுகப்படுத்துங்கள் என்கிறாய்.



(தொடரும்)

-வைரமுத்து-

# வேவு வாசலுக்கு விசாரணை உண்டா?

**கிடப்பில் போடு அல்லது கமிஷன் போடு**

பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டும் என்றால். "ஒன்று கிடப்பில் போடு அல்லது கமிஷன் போடு" என்று ராஜாஜி ஒருமுறை சொன்னார்.

அதுபோல நம் நாட்டில் பெரிய பதவிகளில் இருப்பவர்கள் கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டால், உடனடியாக வழக்கு பதிவு செய்யாமல் விசாரணை கமிஷன்கள் அமைக்கப்பட்டுக் காலவிரயமாக்கப்படுவது தொடர்நிகழ்வுகளாகிவிட்டன.

விசாரணை கமிஷன் சட்டத்தினபடி கமிஷனின் அறிக்கைகள் (தீர்ப்புகளல்ல) வெறும் சிபாரிசுகளாக மட்டுமே இருக்கும். அவை, அரசைக் கட்டுப்படுத்தாது.

கமிஷன கொடுத்த அறிக்கையை நாடாளுமன்றத்திலோ சட்டமன்றங்களிலோ ஆறு மாதங்களில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று மட்டுமே சட்டம் கூறுகிறது.

விசாரணை கமிஷன் அறிக்கைகளைப் பற்றி எள்ளி நகையாடிய சஞ்சய் காந்தி. அந்த அறிக்கைகள் காவல் துறையினரால் பதியப்படும் 'முதல் தகவல் அறிக்கை' என்று குறிப்பிட்டார். கமிஷன் செயற்பாடுகள் அதை அமைத்த அரசுகளின் விருப்புவெறுப்புக்கேற்ப நடைபெற்று வந்ததுதான் கடந்த கால வரலாறு.



**கவலைக்குரிய இரு விடயங்கள்**

வேவு வாசல் சம்பவம் கவலைபடக்கூடிய இரண்டு விடயங்களைக் கொண்டுவந்துள்ளது. இந்தியாவில் உச்ச நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றங்களிலும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் தங்களது ஓய்வுக்குப் பின் பதவிகளை அனுபவித்துவந்தாலும், ஏன் வேவு வாசல் விசாரணை கமிஷன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர் என்பது முதல் கேள்வி.

பதவியில் உள்ள நீதிபதிகள். தேசநலன்குறித்த பிரச்சினைகள் தவிர மற்ற பிரச்சினைகளை விசாரிக்க அமைக்கப்படும் விசாரணை கமிஷன்களில் பதவியேற்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் பென் வால்டர் என்ற வக்கீல் தொடர்ந்த வழக்கில தீர்ப்பளித்திருப்பதால், தற்போது பதவியில் இருக்கும் நீதிபதிகள் அந்த கமிஷனில் பொறுப்பேற்க முடியாது.

தேர்தல் முடிவுகள் மோடிக்கு ஆதரவாக இருந்தால் கமிஷனின் நிலை என்னவாகும் என்ற நிச்சய மற்ற தன்மையும் காரணமாக இருந்திருக்கலாம்.

**அமெரிக்க நீதிபதிகள் X இந்திய நீதிபதிகள**

இந்தப் பிரச்சினையின் உண்மைத் தன்மையை அறிய வேண்டிய பொறுப்பில் உள்ள ஓய்வுபெற்ற நீதிபதிகள் மட்டுமே தலைமை வகிக்கும்படியான விசாரணை கமிஷனுக்கு ஒரு நீதிபதிகூட முன்வரவில்லை என்பதை பா.ஜ.கவினர் நீதித் துறையின் கௌரவத்தைக் காப்பாற்றி விட்டனர் என்று கொண்டாடுவது உண்மையில் வஞ்சப் புகழ்ச்சியே.

அடுத்து வரக் கூடிய அரசில் முக்கியப் பொறுப்பு வகிப்பார் என்று நம்பப்படும் ஒருவர் மீது விசாரணை நடத்த முன்வர ஓய்வுபெற்ற நீதிபதிகள் கூடத் தயாரில்லை என்பது நம்மை அச்சுறுத்துகிறது.

'வாட்டர் கேட்' ஊழலுக்குப் பிறகு. நிக்சனின் செல்வாக்கு சரிந்ததற்குக் காரணம். அமெரிக்க நீதிபதிகளின் உறுதியான நீதிபரிபாலனம் மட்டுமே. அவரால் பதவி பெற்றவர்கள்கூட அவருக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர் என்பது அங்குள்ள நீதித் துறையின் சுதந்திரத்தைக் காட்டுகிறது.

வேவு வாசல் பிரச்சினையைச் சிலர் அற்ப விடயமென்றும், அதைக கண்டுகொள்ளத் தேவையில்லை என்றும் கூறிவருவது வருத்தத்தை அளிக்கிறது.

பிரதமர் ஆவதற்குத் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதர், இப்படித் தனிமனிதச் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில், தன் கீழுள்ள ஒற்றர் படையை ஒரு பெண்ணை வேவுபார்ப்பதற்கு முடுக்கி விட்டிருநதால், நிச்சயமாக அவர் இந்நாட்டின தலைமைப் பொறுப்புக்கு வரலாயககற்றவர். அந்தச் சம்பவத்தை அற்பத்தனமானது என்று ஒதுக்கி விட முடியாது.

**அரசின் மிருக பலம்**

எதிர்பாராத திருப்பமாக. சம்பந்தப்பட்ட பெண் இந்த விடயத்தில் விசாரணை கமிஷன் நியமிக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியுள்ளார்.

அண்ணாமலை நகரில் பொலிஸ் தடியடிக்குப் பின்னர், மரணமுற்ற உதயகுமார் தன் மகனே அல்ல என்று அவரது தந்தை பெருமாள் சாமியையே விசாரணை கமிஷன் முன்னால் சாட்சி சொல்ல வைத்த மாநில அரசின் மிருகபலத்தை நாம் பார்த்திருக்கிறோம். அதற்குப் பின்னரும் விசாரணை கமிஷன் நீதிபதி என்.எஸ். ராமசாமி மாநில அரசுக்கு எதிராகத் தீர்ப்பளித்ததையும் நாம் கண்டோம்.

எனவே, தேர்தல் முடிவுகளின் பிறகு எந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும் வேவு வாசல் பற்றி விசாரணை கமிஷன் அமைக்க முற்படாமல், கிரிமினல் வழக்கு பதிவுசெய்து அதை முறையாக விசாரித்துக் குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தில் உரிய தண்டனை வாங்கித்தருவார்களா?

(முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வல்லுறவு புரிந்த ஆடவனுக்கே அப் பெண்ணை திருமணம் செய்துவைப்பதா?

திருமதி சரோஜா சிவச்சந்திரன்
யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையம்

அதிகரித்து வரும் பாலியல் வல்லுறவை குறைப்பதற்கு குற்றம் புரிந்தவனுக்கே அப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று ஓர் புதிய ஆலோசனையை முன்வைத்துள்ளார் மகளிர் விவகாரத்திற்கு பொறுப்பான அமைச்சர். பெண்களுக்கெதிரான வன்முறை ஓர் தண்டனைக்குரிய குற்றம். பெண்களின் உரிமையை பாதிக்கும் சமத்துவத்தை சீர் குலைக்கும் இவ்வுரிமை மீறல்களுக்கு எதிராக பெண்கள் குரல் கொடுத்து வரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான ஓர் சட்டம் எவ்வாறு சமூகத்திற்கு பொருத்தப்பாடாக அமையும். குற்றம் புரிந்தவர் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ள இச்சட்டம் ஆலோசனை வழிவகுப்பதாகவே உள்ளது. பாலியல் வல்லுறவு தண்டனை சட்டக் கோவையில் தண்டிக்கப்படவேண்டிய குற்றமாக காட்டப்பட்டிருக்கும் அதேவேளை வீட்டு வன்முறைச் சட்டம் 2005 இல் ஏற்படுத்தப்பட்ட சட்டமானது வன்முறை புரிபவர்களுக்கு உரிய தண்டனைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

அப்படியாயின் பாலியல் குற்றம் புரிந்த ஒருவர் அப் பெண்ணை மணம் முடிக்கும் பட்சத்தில் இச்சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவும் செல்லுபடியற்றதாகி விடுமா? இச் சட்டங்களினால் பயனேதும் உண்டா என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

பாலியல் வல்லுறவு என்பதே ஒரு பெண்ணின் சம்மதத்தோடு என்றும் நடைபெறுவதில்லை. வல்லுறவை புரியும் ஓர் ஆண் ஏற்கனவே திருமணமானவராயின் அவர் மீண்டும் அப்பெண்ணை மணம்முடிக்க முடியுமா? பல பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் ஒரு ஆண் யாரை மணம் முடிப்பது? ஓர் பெண் பல ஆண்கள் குழுவினரால் வல்லுறவுக்குட்படுத்தப்படும் போது இவ்வாலோசனைக்கு உட்படுத்தப்படுவார்களா?

ஓர் பெண் சமூகத்தில் இன்று எவ்வாறாறெல்லாம் பாரபட்சப்படுத்தப்படுகின்றாள். அவளது சமத்துவம், சுயகௌரவம் எவ்வாறு சமூகத்தில் நிலைநாட்டப்படுகின்றது. சமூக, பொருளாதார வளர்ச்சியில் முன்னோடியாக விளங்கும் பெண்களின் சுயகௌரவம், பாதுகாப்பு என்பது மேலும் ஒரு படி கீழே செல்ல வேண்டும் என பொறுப்புக் கூறவேண்டியவர் களே செயற்படுவது எவ்வகையில் பொருத்தமாகும்.

பாலியல் வல்லுறவு சம்பவங்கள் குறிப்பாக 2012 இல் 2150 ஆக உயர்ந்துள்ளமை எமது சட்டத்தின் திறனற்ற செயற்பாட்டினையே எடுத்துக்காட்டுகின்றது. சட்டத்தின் செயற்பாட்டை உறுதிப்படுத்தி நீதிமன்றில் விசாரணைக்காக பதியச் செய்யப்படும். பாலியல் சம்பந்தமான வழக்குகள் துரிதமாக விசாரிக்கப்பட்டு உரியவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதில் அமைச்சு அக்கறை காட்டுவதில் தவறியுள்ளது இங்கு தெளிவாகின்றது.



இலங்கை ஜனநாயக நாடு. பெண்களின் சமத்துவம் பாலியல் ரீதியில் பாரபட்சப்படுத்துவதற்கு எமது யாப்பில் இடமே இல்லை. அத்துடன் பெண்களின் சகலவிதமான பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான மரபொழுங்கில் இலங்கை பெண்கள் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் 1981 இல் உறுதி அளித்துள்ளது. மனிதவுரிமைகள் மரபொழுங்கில் தேசிய மனிதவுரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதில் இல்ங்கை தனது கடப்பாட்டை வெளிக்காட்டியுள்ளது. இவை எல்லாவற்றையும் புறம்தள்ளி இதுவரை காலமும் பெண்கள் அயராது போராடி பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு விழு ந்த ஓர் அடியாகவே இவ்வாலோசனை இருக்க முடியும். ஆகவே சமூகத்தில் எம்மோடு தோளாடு தோளாக அயராது சகல போராட்டங்களில் பங்கு கொண்டு பெண்கள் உயர்ச்சிக்காக பாடுபட்டு வரும் பெண்களே! இது நீங்கள் குரல்கொடுக்க வேண்டிய தருணம் உங்கள் கருத்துக்களை தவறாது பத்திரிகைகளினூடாக வெளிப்படுத்துங்கள்.

உங்கள் ஆழமான கருத்துக்கள் மாற்றத்தின் படிகளாக அமையட்டும்.

## வழமைக்கு திரும்பும் புகையிரத சேவை

### போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம

(கொழும்பு)

புகையிரத சாரதிகள் தமது கடமைகளை வழமை போன்று செய்வதற்கு இணங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

புகையிரத தொழிற்சங்கங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பேச்சுவார்த்தை முடிந்த பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போக்குவரத்து அமைச்சர், இனி புகையிரத சேவை வழமை போன்று இடம்பெறும் என தெரிவித்தார்.

புகையிரத சாரதிகள் ஓட்டுநர்களின் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தால் புகையிரத சேவையில் தாமதம் ஏற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## தாதியர்களே தொழிலின் கௌரவத்தை பாதுகாப்பதில் கவனம் செலுத்துங்கள்

### ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

அலரி மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தவர்களும் அம்பாறையில் சுதந்திரமாக மே தினம் கொண்டாடியவர்களுமே நாடடில் சுதந்திரம் இல்லையென சர்வதேசமெங்கும் பிரசாரம் செய்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தையொட்டிய தேசிய நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

வெளிநாட்டுத் தூதரகங்களில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோரை நாம் அறிவோம். இது விடயத்தில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டியது முக்கியம்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போராட்டங்கள் தீர்வாகாது. பேச்சுவார்த்தை மூலம் எத்தகைய பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும்.

அதிவேக வீதிபோன்று செயற்பாடுகள் வேகமாக இடம்பெறவேண்டும். எனினும் இன்னொருவன் பணத்தில் இடம்பெறக் கூடாது. அது அரச சார்பற்ற நிறுவனங்களின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு எம்மால் இடமளிக்க முடியாது.

உலகில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்த சேவை இது. உலகில் மிகவும் பழைமையான வைத்தியசாலை மிஹிந்தலையிலேயே உள்ளது என்ற வரலாறு பலருக்குத் தெரியாது.

இலங்கையின் தாதியர் சேவையைப் போன்று சுகாதார சேவைக்கும் உலகளவில் நற்பெயர் உள்ளது. தாதியர் சேவையென்பது கௌரவமானது, கருணை மிக்கதுமான சேவையாகும். அதனைப் பாதுகாப்பது தாதியர்களின் பொறுப்பாகும்.

தாதியர் சேவை மிக கஷ்டப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட சேவை. ஐ.தே.க.வின் ஆட்சிக்காலத்தில் அதற்குரிய கௌரவம் வழங்கப்படவில்லை.

பௌத்த பிக்கு அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவராக பதவி வகிக்கக் கூடாது என்று கூறி தாதியர்களின் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் ஐ.தே.க. தலைவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

உரிமைகளை பெற்றுக் கொள்ள பேச்சுவார்த்தையால் முடியும். அது தொடர்பில் நான் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழிகாட்டல்களை வழங்கியுள்ளேன்.

நாம் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளுக்குச் செவிமடுப்பவர்கள். கடந்த கால ஆட்சியாளர்களைப் போன்று குளிரூட்டப்பட்ட அறையில் சர்வதேச நிதியத்தின் அதிகாரிகளை வைத்து வரவு செலவுத் திட்டம் தயாரித்தவர்கள் நாமல்ல. தொழிற்சங்கத்தினரதும் யோசனைகளைப் பெற்று வரவு செலவுத் திட்டம் தயாரித்தவர்கள் நாம்.

தாதியருக்கு சலுகை வழங்கியதும் தாதியர் கவுன்ஸில் அமைக்கவும் யாப்பு உருவாக்கவும் அனுமதி வழங்கி பாராளுமன்ற அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தது எமது அரசாங்கமே.

உங்கள் தொழிலின் கௌரவத்தையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்துங்கள். டாக்டர்களினதும் தாதியரினதும் சேவையையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனை நிறைவாகப் பெற்றுக் கொடுங்கள் என்றார். (2)

## நைட்டிங்கேல் கொள்கைகளை பின்தள்ள வேண்டியநிலை

### தாதியர் சங்கம் தெரிவிப்பு

தமது உரிமைகளை வெற்றிகொள்வதற்கு சில சந்தர்ப்பங்களில் நைட்டிங்கேல் கொள்கைகளை பின்தள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று அரச தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச தாதியர் தினம் மற்றும் தாதியர் சேவையின் ஆரம்ப கர்த்தாவான புளோரன்ஸ் நைட்டிங்கேல்லின் ஜனன தினத்தை நினைவு கூறும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய,

இரண்டொரு தினங்கள் தாதியர் சேவைகளை இடைநிறுத்தியேனும் பொதுமக்களின் எதிர்கால அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே கடந்த தினங்களில் செயற்பட்டதாக குறிப்பிட்டார்.

வேறு மாற்று வழிகள் இல்லாத காரணத்தால் நைட்டிங்கேல் கொள்கைளை பின் தள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதார துறையில் தொழிற்சங்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்று நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சுகாதார துறையில் ஒவ்வொரு குழுவினருக்கு இடையில் நட்புறவு பாதிக்கப்பட்டுள்ளமை சுகாதார சேவைக்கு பாதிப்பாக அமைந்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (2)

## மூதாட்டியை கொலை செய்த நபர்களை கைது செய்யுங்கள்

### இலங்கை அகதிகள் போராட்டம்

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் பகுதியில் மூதாட்டியை கொலை செய்தவர்களை கைது செய்யக் கோரி இலங்கை அகதிகள் திடீரென வீதிமறியலில் ஈடுபட்டனர்.

இலங்கை அகதி முகாமில் இருந்த 62 வயதான மூதாட்டியே அண்மையில் அதே பகுதியில் முட்புதரில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். பொலிசார் அவரது உடலைக் கைப்பற்றி கோவை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மூதாட்டியைக் கொன்றவர்களை கைது செய்யக் கோரி இலங்கை அகதிகள் வீதி மறியலில் ஈடுபட்டனர். அப்போது மறியலில் ஈடுபட்டவர்களை பொலிசார் அப்புறப்படுத்த முயன்றதால் ஆத்திரமடைந்த சிலர், பொலிசாரின் வாகனத்தின் மீது கற்களை வீசினர். இதனிடையே பிரேத பரிசோதனை முடிந்து உடல் எடுத்து வரப்பட்ட நிலையில், உடலை வீதியில் வைத்து போராட்டத்தை தொடர்ந்தனர்.

உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் மூதாட்டி கொலை வழக்கு தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் உறுதியளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இதனால் அப் பகுதியில் சுமார் 4 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA



# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

கல்யாண முருங்கை

Botanical Name- Erythrina indica

Family- Papilionaceae

Eng-Indian coral tree

Sinh- Eramudu



வலியற்ற உயர்ந்து வளரும் மரம். தண்டில் சிறிய முட்கள் காணப்படும். அகன்ற பெரிய மூன்று திட்டு வடிவச் சிற்றிலைகளைக் கொண்ட கூட்டிலை. காம்பு 10- 15 சென்ரி மீற்றர் நீளமானது. இலையடிச் செதில்கள் உள்ளன. இலையடிச் செதில்கள் சுரப்பி போன்றிருக்கும். பெரிய மலர். நல்ல சிவப்பு நிறமானது. மலரடிச் செதில்கள் உள்ளன. ஒரு புற வெடிகனி. 15-30 சென்ரி மீற்றர் நீளமானது. விதை முட்டை வடிவானது. ஹைலம் பக்க வாட்டில் இருக்கும். இதன் அடிமரம் மென்மையானது. வெண்ணிறமானது. மலர்களில் மணமிருக்காது. இதனைக் கவிர் என்றும் கூறலாம். இதன் பூக்களை மாசி மாதத்தில் காணலாம்.

வெற்றிலை, மிளகு போன்ற ஏறுகொடிகளை இதில் படர விடலாம். இதனுடைய இலை, பூ, விதை, பட்டை ஆகியவை மருத்துவ குணம் மிகுந்தவை.

இதன் இலைச்சாறு ஒரு தேக் கரண்டி எடுத்து அத்துடன் ஒரு மேசைக் கரண்டி விளக்கெண்ணெய் சேர்த்து காலை, மாலை 3 நாட்கள் சாப்பிட சீதபேதி விலகும்.

இலைச்சாறு 30 மில்லி எடுத்து சிறிது தேன் சேர்த்து உள்ளுக்கு கொடுக்க வயிற்றுப்புழுக்கள் வெளிப்படும். இது நீர்மலம் போக்கியாகக் கொள்ளப்படுகின்றது.

இலையை ஒன்றிரண்டாக நறுக்கிச் சுடு தண்ணீரிலிட்டு நல்ல சூட்டுடன் கீல் (மூட்டுக்களில் ஏற்படும் வலி) வாதத்திற்கு வைத்துக் கட்டினால் வலி நீங்கும்.

இதன் இலைகளை சிறுக அரிந்து தேங்காய் எண்ணெயில் வதக்கி உண்டால் தாய்ப்பால் கூடுதலாகச் சுரக்கும்.

கல்யாண முருங்கைக்கீரை, சீரகம் இரண்டையும் நெல்லிக்காய்ச் சாறு சேர்த்து அரைத்து 5 கிராம் அளவு அதிகாலையில் சாப்பிட்டால் அதியுயர் குருதி அமுக்கம் குறையும்.

கல்யாண முருங்கை கீரையுடன் ஊறவைத்த வெந்தயம் 8 கிராம் அளவு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் உடற் சூடு தணியும்.

கல்யாண முருங்கைக் கீரையுடன் கருஞ்சீரகம் சேர்த்து அரைத்துப் பூசினால் படை போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

கல்யாண முருங்கைக்கீரை, மிளகு, பூண்டு சம அளவு எடுத்து குடிநீர் காய்ச்சி 30- 60 மில்லி அருந்த இரத்தச்சோகை (இரத்தக்குறைவு) குணமாகும்.

இதன் இலையின் சாறு 15 மில்லி லீற்றர் அளவு தேனுடன் கலந்து தொடர்ச்சியாக 2 அல்லது 3 மாதங்கள் வரையில் காலை, மாலைகளில் உட்கொண்டுவரின் மாதாந்த சூலகத்திலுண்டாகும் வயிற்று வலியைப் போக்கி மிகப் பருத்த உடலை இளைக்கச்செய்து மலக்கட்டுநோயையும் நீக்கும்.

இதன் பூக்கள் ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 ஆக குடிநீர் காய்ச்சி 30- 60 மில்லி அருந்த வயிற்றுப்புண் நீங்கும்.

இதன் விதைகளை மேற்றோல் நீக்கி நன்றாகக் காயவைத்து இடித்து பொடித்து அரித்த தூளில் 65-130 மி.கிராம் அளவு இரவு படுக்கப் போகும்முன்பு சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டு கல்யாண முருங்கைக் கீரையுடன் 3 மிளகு சேர்த்து அரைத்து 5 கிராம் அளவு அதிகாலையில் சாப்பிட சளி மற்றும் கபநோய்கள் குணமாகும்.

கல்யாண முருங்கையுடன் பார்லி அரிசி ஒரேயளவு சேர்த்து குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அருந்தினால் சிறுநீர் எரிச்சல் குணமாகும்.

கல்யாண முருங்கைக் கீரையுடன் ஓமம், வாய்விடங்கன் இரண்டையும் சம அளவு சேர்த்து அரைத்து இரவில் சாப்பிட்டால் மலச்சிக்கல் குணமாகும்.

கல்யாண முருங்கைக் கீரையை கறுப்பு எள்ளு ஊறவைத்த தண்ணீரில் அரைத்து 5 கிராம் காலை, மாலை சாப்பிட தடைப்பட்ட மாதவிலக்கு சீராகும்.

கல்யாண முருங்கைக் கீரை, கசகசா, உளுந்து ஆகியவற்றைமாதுளம் பழச்சாறு சேர்த்து அரைத்து தினமும் 12 நாட்கள் சாப்பிட உடல் பலம் பெற்று ஆண்மை பெருகும். மறுநாட் காலை ஆமணக்கெண்ணெய் சாப்பிட மலம் இளகி வெளியேறுவதுடன்குடற்புழுக்களும்வெளியேறும். உடலை இலகுவாக்கும்.

இதன் பட்டையின் உட்பாகத்திற்கு நெய் தடவி தீயில் வைக்க இதில் ஒரு வகைப்புகை படியும். அதை எடுத்து கண்ணின் கீழ் இமையின் உட்புறத்திலும் ஓரத்திலும் தடவி வர கண்நோய் முதலியன நீங்கும்.

இதன் பட்டைகளைக் கொண்டு குடிநீர் காய்ச்சி புண்களைக் கழுவ புண்கள் இலகுவில் ஆறும்.

இதன் இளம் வேர்களை பொடி செய்து 500 மி.கிராம் அளவு காய்ச்சி ஆறிய பால் சேர்த்தருந்த தாது புஷ்டி உண்டாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

இதன் வேர்ப்பட்டை 20 கிராம் எடுத்து நீர் 350 மில்லி சேர்த்து 1/4 பங்காக காய்ச்சி 30 மில்லி 3 வேளை அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

இதனுடன் பட்டையையும் இலைகளையும் நீர் சேர்த்து பசைபோல் அரைத்து வீக்கங்களுக்கும் தோலில் ஏற்படும் தாபிதத்திற்கும் பற்றிட குணமாகும்.

இதன் பட்டைக்குடிநீரை பல்வலிக்கு வாய்கொப்பளித்து வரலாம்.

இதன் இலைகளின் ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 ஆக காய்ச்சி 30 மில்லிலீற்றர் அளவு காலை, மதியம், மாலை அருந்த இருமல், ஆஸ்துமா குணமாகும்.

# தாதியர் பிரச்சினையை தீர்க்க அரசு ஒத்துழைப்பு வழங்கும்

## ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் எவரும் நமது தொழிற்சங்கத்திலிருந்து விலகி அதனை செய்யலாம் என அரசசேவைகள் ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முறுத்தட்டுவே ஆனந்த தேரர் பகிரங்கமாக அறிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான தாதியர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் பகிரங்கமாக இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

சமன் ரத்னப்பிரிய தலைமையிலான தொழிற்சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த தேரர், அதில் ஈடுபட வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்.

எத்தகைய பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியுமென்றும், அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க ஜனாதிபதி தயாராகவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியர்கள், தாதியர்களுக்கு எதிரான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடுநிலை வகித்துப் பேச்சு நடத்தத் தாம் தயாராகவுள்ளதாகத் தெரிவித்த அவர், கீரியும் பாம்பும் போல குரோதத்துடன் செயற்பட வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். (2)

# ஷிராணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிடிய இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க நிரபராதியா? குற்றவாளியா? என வழக்கு விசாரணைகளின் போது தீர்ப்பளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஷிராணியின் வங்கி தகவல்கள் குறித்த அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், அதனை சமர்ப்பிப்பதற்கு பிரதிவாதிகள் இடையூறு விளைவித்ததாகவும் ஷிராணி தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி வாதாடினார்.

இதன் காரணமாக அவ்வறிக்கை நீதிமன்றில் ஒப்படைக்கும் வரை வழக்கு மீதான தீர்ப்பை வழங்க வேண்டாம் என அவர் நீதவானிடம் கேட்டுக் கொண்டார்.

இதன்படி ஷிராணியின் குறித்த வங்கி தகவல்களை எதிர்வரும் 20ஆம் திகதி முன்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (2)

# அரசியல் தஞ்சம் கோரியுள்ள அறுவர் நாடு கடத்தப்படுவர்

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச இளைஞர் மாநாட்டில் பங்கேற்ற சில இளைஞர், யுவதிகள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

தமது நாடுகளில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக நாடு திரும்ப முடியாது என தெரிவித்துள்ளனர்.

சில நாடுகளைச் சேர்ந்த இளைஞர் பிரதிநிதிகளின் இந் நடவடிக்கை இளைஞர் விவகார அமைச்சுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியா, உகண்டா, கிரிபானி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 6 பேர் இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

நாடுகளில் நிலவிரும் பிரச்சினைகள், இன, மத முரண்பாடுகள் போன்ற காரணிகளினால் மீளவும் நாடு திரும்பமுடியாது என தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்ப முடியாது எனவும் இலங்கையில் தங்க அனுமதிக்குமாறும் கோரிய இருவரை பாதுகாப்புத் தரப்பினர் விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விசா காலம் பூர்த்தியானதன் பின்னர் எவரும் நாட்டில் தங்க முடியாது எனவும் அவர்கள் நாடு கடத்தப்படுவர் எனவும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரியவர்கள் எதிர்வரும் நாட்களில் நாடு கடத்தப்படவுள்ளனர். (2)

# பாப்பரசர் இங்கு வரலாம் கருத்து வெளியிடக்கூடாது

## மத அமைப்புக்கள் வெருட்டு

பாப்பரசர் புனித பிரான்ஸிஸ் இலங்கைக்கு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பௌத்த அமைப்புகளான பொதுபல சேனாவும், ராவணா சக்தி அமைப்பும் இலங்கையில் மத நல்லிணக்கம் இல்லையென பாப்பரசர் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக்கோர வேண்டுமென்றும் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

பாப்பரசர இலங்கைக்கு வருவதற்கு முன்னர் மத நல்லிணக்கம் இலங்கையில் இல்லையெனத் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோர வேண்டும். அதன் பின்னர்தான் இங்கு வர வேண்டும்.

எமது நாட்டில் மதங்களுக்கிடையே மோதல்கள் கிடையாது.

பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து மதத்தினரும் இங்கு நல்லிணக்கத்துடனேயே வாழ்கின்றனர்.

ஒருசில அடிப்படைவாத மதச் சக்திகளின் நடவடிக்கைகள் காரணமாகவே சிறுசிறு பிரச்சினைகள் தலைதூக்குகின்றனவே தவிர, முழு நாட்டிலும் மத நல்லிணக்கம் காணப்படுகிறது.

எனவே, இங்கு மத நல்லிணக்கம் இல்லையென்று கூறிய கருத்துகளுக்கு பாப்பரசர் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

பாப்பரசர் உலகம் மதிக்கும் ஒரு மதத்தலைவர். அவர் இங்கு வரலாம். ஆனால், எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடக்கூடாது. எமது நாடு தொடர்பில் கருத்துகளையும் வெளியிடக்கூடாது.

இங்கு வரலாம் போகலாம். ஆனால், இலங்கையில் எந்தெந்த பிரதேசத்திற்கு பாப்பரசர் போக வேண்டும், யார் யாரை சந்திக்க வேண்டுமென்பது அனைத்தையும் அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இலங்கை தொடர்பிலான பிழையான கருத்துகளுக்கு அவர் இரையாகி விடுவாரென்றும் இராவணா சக்தியின் தலைவர் இத்தேகந்தே தம்மானந்த தேரர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைக் காவு கொடுக்கும் இந்திய அரசு



இலங்கையில் நிகழ்ந்த இனப்படுகொலைகள், போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் சார்பில் சர்வதேசப் பொது விசாரணை நடத்துவதற்கு முடிபு செய்யப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் கூடுவதற்கு முன்னாலும், கூடிய போதும் அதில் கலந்து கொண்ட பல நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகளை ஆதார பூர்வமாக விளக்கிச் சொல்லியும், மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வைப்பதற்குப் பெரும்பாடுபட்ட புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகளை ஒடுக்க வேண்டுமென இலங்கை அரசு முடிபு செய்தது.

இதன்மூலம் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான குரல் உலக நாடுகளில் ஒலிப்பதை அறவே தடுப்பதற்குத் திட்டமிட்டது. அதற்கிணங்க, சுவிட்சர்லாந்து, பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, பெல்ஜியம், டென்மார்க், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புகளையும் இந்த அமைப்புகளின் பல்வேறு பொறுப்புகளை வகிக்கும் 424 தமிழர்களையும் தனது நாட்டிற்கு வரவிடாமல் இலங்கை தடை செய்துள்ளது.

இந்த அமைப்புகளுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் தடை விதிக்கும்படி உலக நாடுகளுக்கு இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்தது.

உலக நாடுகளில் வாழும் தமிழர்களை நாடற்றவர்களாக்கி, துன்பக் கேணியில் வீழ்த்துவதே இலங்கை அரசின் நோக்கமாகும்.

இந்தியாவைத் தவிர உலகில் எந்த நாடும் இந்த வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. இந்தியாவைத் தவிர உலக நாடுகள் அனைத்தும் இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டன.



இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு ஆளாகி, சர்வதேச விசாரணையை எதிர்நோக்கி இருக்கும் இலங்கைக்கு இத்தகைய தகுதி இல்லை என்று அமெரிக்கா உட்பட பல நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.



ஆனால், இந்திய அரசு இந்தக் கோரிக்கையை உடனே ஏற்று இந்த அமைப்புகளுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் தடை விதித்துள்ளது.

கடந்த 65 ஆண்டு காலமாக சிங்கள அரசு நடத்தி வரும் இனப்படுகொலை வன்கொடுமைக்கும், பாலியல் கொடுமைக்கும், சித்ரவதைகளுக்கும் ஆளாகி, தங்கள் குடும்பத்தில் ஒருவரையோ, இருவரையோ இழந்து சொந்த மண்ணில் வாழ முடியாமல் அகதிகளாக வெளியேறி, உலக நாடுகளில் தஞ்சம் புகுந்து அந்தந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழ வேண்டிய அவல நிலைமைக்கு ஈழத் தமிழர்கள் ஆளாகி உள்ளார்கள்.

மனித உரிமையை மதித்து போற்றுகிற பல நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு தங்கள் நாட்டின் குடியுரிமையை வழங்கி உள்ளன.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு ஒருபோதும் குடியுரிமை கிடைக்காது என்பது மட்டுமல்ல, அந்நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பார்கள்.

உலக நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள், எந்த வேலை ஆனாலும் அதை செய்து தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அதேவேளையில் தங்களுடைய மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கத் தமிழ் அமைப்புகளை நிறுவி, அதன் மூலம் தங்களுடைய குழந்தைகளுக்கு அவற்றைக் கற்றுக் கொடுத்து சிறந்த தமிழர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தந்த நாடுகளில் உள்ள அகதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரின் ஆதரவைத் திரட்டும் பணியினைச் செய்வதற்காக இந்த அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்களே தவிர, பயங்கரவாதச் செயல்களைச் செய்வதற்கு அல்ல, அல்லவே அல்ல.

இந்த அமைப்புகளில் அளப்பரிய தியாக உணர்வும், மானுட நேயமும் நிறைந்த சிறந்த கல்வியாளர்கள், கலைஞர்கள், இசைவாணர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் தங்கள் மக்களுக்கு நல்வழிகாட்டி வருகிறார்கள்.

இலங்கை அரசின் தீய நோக்கத்திற்கு துணை நிற்பதையே இந்திய அரசு தனது கடமையாக கொண்டிருக்கிறது. 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் பதறப்பதறப் படுகொலை செய்யப்பட்டதில் இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் பெரும் பங்கு உண்டு.

ஈழத் தமிழர்களை மட்டுமல்ல, இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பலிகொடுத்து சிங்கள அரசைத் திருப்தி செய்ய இந்திய அரசு தொடர்ந்து முயல்கிறது.

இலங்கையில் குடியேறி ஐந்து தலைமுறைகளுக்கு மேல் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்கள்.

தங்களுடைய உழைப்பினால் இறப்பர், தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிய அவர்களில் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்டோரை இலங்கை அரசு விரட்டியடித்த போது அதற்கு சம்மதம் தெரிவித்தது இந்திய அரசு.

கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்து, அதன்மூலம் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ந்து வேட்டையாடவும், 800 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் படுகொலை செய்யப்படவும் காரணமாக இருந்தது இந்திய அரசே.

இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கிற ஈழத் தமிழ் அகதிகளை வாழ்வதற்கு தகுதியற்ற இடங்களில் குடியேற்றி, பட்டினியும், நோயும் அவர்களை வாட்டி வதைக்கக் காரணமாக இருப்பது இந்திய அரசே. உலக நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள அகதிகளுக்கு ஐ.நா. அகதிகள் ஆணையம் எல்லா விதமான உதவிகளையும் செய்துவருகிறது.

பல இலட்சம் பாலஸ்தீன அகதிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஐ.நா. அகதிகள் ஆணையத்தினால் பராமரிக்கப்படுகிறார்கள். இன்னும் பல நாடுகளின் அகதிகள் இவ்வாறே நன்கு கவனிக்கப்படுகிறார்கள்.

ஆனால், இந்திய அரசு ஈழத் தமிழர் அகதிகளுக்கு போதுமான உதவி செய்யாததோடு, அவர்களை ஐ.நா. அகதிகள் ஆணையப் பொறுப்பில் ஒப்படைக்க பிடிவாதமாக மறுக்கிறது.

இந்தியாவில் திபெத் அகதிகள், வங்க அகதிகள், பர்மா அகதிகள் போன்ற பல நாடுகளைச் சேர்ந்த அகதிகள் வாழ்கிறார்கள். அவர்களையெல்லாம் நல்ல முறையில் கவனித்துக் கொள்கிற இந்திய அரசு, ஈழத் தமிழர்களை மட்டும் ஓரவஞ்சனையுடன் நடத்துகிறது.

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள பல நாட்டு அகதிகளில் யாருக்கும் செய்யாத கொடுமையை ஈழத் தமிழ் அகதிகளுக்கு இந்திய அரசு இழைக்கிறது.

அவர்களில் சிலரை பொய்யான குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்து, நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பாமல், பல ஆண்டு காலமாக தொடர்ந்து சிறப்பு முகாம்கள் என்ற கொடுஞ் சிறைகளில் அடைத்துத் துன்புறுத்துகிறது. சிங்கள அரசு கேட்டாலும் கேட்காவிட்டாலும், அதனுடைய பலி பீடத்தில் தமிழர்களைக் காவு கொடுக்க இந்திய அரசு என்றும் தயாராக உள்ளது.

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA.



# பயண பேருந்துகளில் பெண்கள் செல்ல முடியாத நிலைமை



## அமைச்சர் கரலியத்த ஆதங்கம்

நாட்டில் உள்ள பெண்கள பயணி பேருந்துகளில் செல்லவும் வீடுகளில் தனிமையில் இருக்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நலத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்களுக்கு எதிராக இவ்வாறான வன்கொடுமைகளில் ஈடுபடும் நபர்கள் உண்ணும் உணவில் விஷம் உள்ளதா தெரியவில்லை.

முன்னைய காலங்களில் வீடுகளில் ஏற்படும் பிரச்சினைகள் வெளியில் தெரிவதில்லை. அவை வீடுகளிலேயே தீர்க்கப்பட்டன. அந்த நிலைமை தற்போதில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முழு உலகத்திற்கு தெரிய வருகிறது. பெண்களுக்கு எதிராக வன்முறைகள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை அண்மைக்காலமாக ஊடகங்களில் வெளிவருவதை காணமுடிகிறது.

உலகில் பல நாடுகளில் இப்படியான பல சம்பவங்கள் நடக்கின்றன. பெண்களிலும் இப்படியானவர்கள் இருக்கின்றனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# வடக்கில் அஞ்சலி நிகழ்வுகளுக்கு தடைவிதிப்பது நியாயமானதல்ல

## ஜனநாயகக் கட்சி தெரிவிப்பு

வடக்கில் அஞ்சலி நிகழ்வுகளுக்கு தடை விதிப்பது நியாயமானதல்ல என ஜனநாயகக் கட்சியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆண்டுகளாக நீடித்து வந்த யுத்தம் காரணமாக பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. யுத்தம் காரணமாக உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்த அனுமதியளிக்காமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளில் யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு நினைவஞ்சலி, செலுத்த அனுமதியளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறவினர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் உயிரிழந்த போராளிகளின் குடும்பத்தாரும் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட வேண்டும்.

ஜே.வி.பி. ஜே.என்.பி மற்றும் முன்னணி சோசலிச கட்சி ஆகியன கடந்த கால கிளர்ச்சிகளில் உயிர் நீத்தவர்களுக்காக அஞ்சலி நிகழ்வுகளை பிரமாண்டமான முறையில் நடத்தி வருகின்றன. அரசாங்கம் வடக்கிற்கு ஒரு கொள்கையையும், தெற்கிற்கு பிறிதொரு கொள்கையையும் அமுல்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

யுத்தத்தில் உயிரிழந்த எல்லாளமன்னனை நினைவு கூர்வதற்கு துட்டகைமுனு மன்னர் அனுமதியளித்திருந்தார். அதனை அரசாங்கமும் பின்பற்ற வேண்டும் என்றார். (2)

# சர்வதேச நிர்ணயங்களுக்கு புறம்பாக மத்தள விமான நிலையம் அமைப்பு

## யோகராஜன் எம்.பி சுட்டிக்காட்டு

மத்தள விமான நிலையம் சர்வதேச தர நிர்ணயங்களுக்கு புறம்பான வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு இரண்டாவது சர்வதேச விமான நிலையம் ஒன்று அவசியம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.எனினும், இரண்டாவது விமான நிலையம் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட இடம் உசிதமானதல்ல.

சர்வதேச தர நிர்ணயங்களுக்கு புறம்பான வகையில் மத்தளயில் விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதான விமான நிலையம் அமைந்துள்ள வலயத்தில், கால நிலை சீர்கேடுகள் ஏற்படும் போது மாற்று விமான நிலையமொன்றுக்கு விமானங்களை திசை திருப்புவது வழமையானதாகும் .

எனினும், கட்டுநாயக்க மற்றும் மத்தள ஆகிய இரண்டு சர்வதேச விமான நிலையங்களும் தென் மேற்கு பருவப் பெயர்ச்சி காலநிலை வலயத்திற்கு உட்பட்டவை எனவும், இதனால் காலநிலை சீர்கேடுகள் இரண்டு விமான நிலையத்தையும் ஒரே விதமாக பாதிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மத்தளையில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டமை புத்திசாதுரியமான தீர்மானமன்று . மத்தள விமான நிலையத்தின் காரணமாக பாரியளவில் இயற்கை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வட மத்திய மாகாணத்தின் ஹிங்குராங்கொட பிரதேசமே இரணடாவது சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கான சிறந்த இடம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் குற்றவியல் விவகாரங்கள் தொடர்பில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து கடந்த 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையில் இரு தரப்பிற்கும் இடையில் சீனாவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

குற்றவியல் விவகாரங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்த உடன்படிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் சார்பில் வெளிவிவகார அமைச்சு, உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களைச் சார்ந்த பிரதிநிதிகளும், இலங்கையின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றுள்ளனர். (2)

# இன்று ஒரு தகவல்

## நிலநடுக்க அளவுகோல்

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்விகழகத்தின் இயற்பியல் பேராசிரியராக ஒருத்தர் இருந்தார். அவருடைய பெயர் எப் ரிக்டர்.

அவர் நிலநடுக்கங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர். ஒவ்வொரு ஆண்டும் 200 இற்கும் அதிகமான நிலநடுக்கங்களை பற்றி அவர் ஆய்வு செய்திருக்கின்றார்.

ஓரிடத்தில் எவ்வளவு நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை எப்படிச் சொல்வது?

அதற்காக அவர் ஒரு அளவு மானியை உருவாக்கினார். அதன் பின் எந்த இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அந்த அளவுகோலை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள். அவருடைய பெயரையும் அதற்கு வைத்தார்கள். அது தான் ரிக்டர் அளவுகோல். 1 என்ற எண்ணுடன் ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு அலகும் முந்தையவிட பத்து மடங்கு பெரியது.

இதைக் கணனித்துறையில் லாக்ரத முறை என்று சொல்கிறார்கள். ரிக்டர் அளவுகோலை கண்டுபிடித்த சார்ள்ஸ் பிரான்சிஸ் ரிக்டர்அமெரிக்காவில் ஒஹியோ என்ற இடத்தில் 26.4.1900 இல் பிறந்தார். 1927 இல் கலிபோர்னியாவில் உள்ள பாசடேனா என்ற இடத்தில் நிலநடுக்க ஆய்வு சுவடத்தில் பணியைத் தொடங்கினார்.

1928 இல் கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்விக்கழகத்தில் இயற்பியல் பாடத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். கால்டெக்கிலுள்ள நிலநடுக்கவியல் ஆய்வுக்கழகத்தில் 1936 முதல் 1970 வரை பேராசிரியராக பணியாற்றினார்.

இக்கால கட்டத்தில்தான் அவர் நிலநடுக்கத்தை கணக்கிடுவதற்கு அளவுகோல் ஒன்றை உருவாக்கினார்.

கலிபோர்னியாவிலுள்ள அல்டாடேனா என்ற இடத்தில் 1985 ஆம் ஆண்டு தனது 85 ஆவது வயதில் காலமானார். நிலநடுக்கம் அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டு தான் இருக்கிறது.

1999 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தாய்வானில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் 2 ஆயிரத்து 400 பேர் இறந்தனர். அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.6 என்று பதிவாகி இருக்கிறதாம்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 7.9 என்று பதிவாகியது. தாய்வானில் பதிவானதை விட இது அதிகம். அதனால் அதன் விளைவு அதிகம் என்று அர்த்தமில்லை. ஏனெனில் ரிக்டர் அளவுகதும் விளைவுக்கும் சம்பந்தமில்லை. பூமியிலிருந்து எவ்வளவு சக்தி வெளிப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பது தான் இந்த அளவுகோல்.

இந்த அளவுகோலில் 2 அல்லது அதற்குக் கீழே நிலநடுக்கம் பதிவாகியிருந்தால் அதில் இலேசான நிலநடுக்கம் என்று பெயர்.

இதை சாதாரணமாக மக்கள் உணர்வதில்லை. அது வருவதும் போவதும் நமக்குத் தெரியாது. அதற்கு மேல் பதிவானால் அதை நம்மால் உணர முடியும்.

1950 இல் இந்தியாவில் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.5 ரிக்டர். 1960 இல் சான்பிரான்சிஸ்கோவில் ஏற்பட்ட பூகம்பம் 8.3 ரிக்டர். 1985 இல் மெக்சிக்கோவில் ஏற்பட்ட பூகம்பம் 8.1 ரிக்டர். 1964 இல் புனித வெள்ளி அன்று அலெஸ்காவில் ஏற்பட்ட பூகம்பம் 8 ரிக்டர். 1976 ஜுலை மாதம் 28 ஆம் திகதி சீனாவில் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 7.8 ரிக்டர்.

ஆனால் விளைவு பயங்கரம். 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்தனர். 1556 இல் சீனாவில் ஒரு பூகம்பம் ஏற்பட்டதாம். அதாவது சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது. அப்போதெல்லாம் ரிக்டர் அளவுகோல் என்றால் என்னவென்றே தெரியாது. இருந்திருந்தால் 9 என பதிவாகியிருக்குமென சொல்கிறார்கள்.

அப்போது 8 இலட்சத்து 30 ஆயிரம் பேர் இறந்தனர். ஆகா... பூகம்பம் என்றால் பயங்கரம்தான். மனிதன் இயற்கையைப் புரிந்துகொண்டு அதை அனுசரித்து வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். அது தான் முக்கியம். ஒரு ஊரில் ஒருத்தர் இருந்தார். அவருக்கு 5 வயதில் ஒரு பையன் இருந்தான். மகா குறும்பு. அந்த ஊரில் பூகம்பம் வரப்போகிறது என்று சொல்லிவிட்டார்கள். உடனே அவர் தன் பிள்ளையை அடுத்த ஊரில் உள்ள உறவினர் வீட்டில் கொண்டு போய்விட்டார்.

10 நாள் கழித்து வந்து கூட்டிக் கொண்டு போகிறேன். அது வரைக்கும் பையனைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு வந்து விட்டார்.

இவர் வந்த மறுநாளே உறவினரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. அதில் உடனடியாக வந்து உங்களுடைய பையனை அழைத்துக் கொண்டு போய்விடுங்கள். அதற்கு பதிலாக பூகம்பத்தை வேண்டுமானாலும் இங்கே அனுப்பி வையுங்கள் என்று இருந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டமிடல் கிளை இடமாற்றம்




(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலகத்தில் நிலவும் இடப்பற்றாக்குறை, மழைகாலத்தில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புக்களை கருத்திற் கொண்டு கண்டாவளை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளையானது புளியம் பொக்கணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இத் திட்டமிடல் கிளை கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி முதல் மாற்றப்பட்டு புளியம் பொக்கணையில் இயங்கி வருகின்றமையினால் பிரதேச செயலகத்தில் ஏற்பட்ட இடப் பற்றாக்குறைக்கு தீர்வாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

# கிளிநொச்சி பொதுச்சந்தையின் வியாபாரிகளிடையே பாரபட்சம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மரக்கறி, மீன் வியாபாரிகளுக்கு மாத்திரம் நிரந்தர கட்டடங்கள் அமைத்துக் கொடுத்து தம்மை புறந்தள்ளியுள்ளதாக ஏனைய வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப் பொதுச் சந்தை அமைப்பதற்காக கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி மஹிந்த சிந்தனை தேசிய புத்துயிர் அமுலாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நாமல் ராஜபக்ஷவினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையில் மரக்கறி, மீன் ஆகியவற்றுக்கு மாத்திரமே கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இதனால் புடைவை, அழகுசாதனப் பொருட்கள், வெற்றிலை, பழங்கள் உட்பட ஏனைய பொருட்களை விற்பனை செய்கின்ற வியாபாரிகள் நிரந்தர கட்டமின்றி தற்காலிக கொட்டகைகளின் கீழே வியாபாரத்தை



முன்னெடுத்து வருகின்றனர்.

மீன் மற்றும் மரக்கறி சந்தைக் கட்டடங்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

அவ் வேளை ஏனைய வியாபாரிகளுக்கு இன்னும் சில மாதங்களினுள் கடைகள் அமைத்துத் தரப்படுமென வாக்குறுதி அளித்து ஒரு வருடம் கடந்தும் தாம் தற்காலிக கொட்டகைகளிலே வியாபாரத்தை முன்னெடுப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இவ் வாறாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளின் கீழ் வியாபாரத்தை முன்னெடுப்பவர்கள் இடப் பற்றாக்குறை, காற்றோட்டமின்மை, மழைகாலங்களில் நீர் புகுதல் ஆகிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகளிடையே பாரபட்சம் காட்டாது சம்பந்தப்பட்டோர் ஏனைய வியாபாரிகளுக்கும் கடைத்தொகுதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-271)

## வாகனம் தடம்புரண்டு ஒருவர் படுகாயம்!



(பூநகரி)

பூநகரி-பரந்தன் வீதியின் 66 ஆவது படைப்பிரிவு முகாமிற்கு அருகாமையில் எல் ரக வாகனம் தடம் புரண்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பூநகரி-பரந்தன் வீதியினால் நெல் மூடைகளை ஏற்றிக் கொண்டு சென்ற எல் ரக வாகனம் முன்னால் வந்த முச்சரக்கரவண்டியை முந்திச் செல்ல முற்பட்ட வேளை தடம்புரண்டுள்ளது.

இவ் விபத்தில் வாகனத்தில் பயணித்த உதவியாளர் படுகாயமடைந்த நிலையில் பூநகரி ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (9-84)

# ஓமந்தை அரச வீட்டுத்திட்டத்தில் நிலவும் தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்

## வலியுறுத்தி மகஜர் கையளிப்பு

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை அரசாங்க வட்டுத் திட்டத்தில் வசிக்கும் அரசாங்க ஊழியர்கள், பல்வேறு இடர்பாடுகளை தாம் எதிர்கொள்வதாகக் கூறி மகஜரொன்றை நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திரவிடம் கையளிக்கப்படவிருந்த இந்த மகஜர் அவர் அங்கு இல்லாமையால், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் சரஸ்வதி மோகநாதனிடம் கையளிக்கப்பட்டது.




இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2011ஆம் ஆண்டு எமக்காக வவுனியா பிரதேச செயலகத்தால் காணிகள் வழங்கப்பட்டு, அந்தக் காணிகளில் வீடுகளை கட்டி குடியேறியுள்ளோம்.

எனினும், சில அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்குள்ள காணிகள் சிலவற்றை அரசாங்க ஊழியர்கள் துப்புரவு செய்யாமல் இருப்பதுடன், அங்கு அவர்கள் வீடுகளை கட்டாமையால் விஷஜந்துகள் (பாம்புகள்) வீடுகளினுள் புகுகின்றன.

எனவே, உடனடியாக பற்றைகளை அகற்றி அங்கு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அல்லது அக்காணிகளை காணிகள் அற்ற ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யவும் வீதிகளைப் புனரமைப்பதோடு பேருந்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதுடன், பேருந்து தரிப்பிடத்தினையும் அமைக்க ஏற்பாடு செய்தல்,

உணவகங்கள், பலசரக்கு கடைகள், மருத்தகங்கள், தனியார் வைத்தியசாலைகள், மத வழிபாட்டு ஸ்தலங்கள், முன்பள்ளி போன்றவற்றை அமைத்தல், எமது வீட்டுத்திட்டத்தில் ஏ - 9 வீதிக்கு இடையில் உள்ள சிறிய காட்டுப் பகுதியை அகற்றி வீதி அமைத்தல், தபால் விநியோகத்தை சீரமைப்பதற்காக வீதிகளுக்கு பெயர் சூட்டுதல்,

வீடு கட்டி வசிக்கும் அரசாங்க ஊழியரகளுக்கு காணிகளுக்குரிய ஆவணங்களை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடு செய்தல்,

பூர்த்தியடையாத நிலையில் உள்ள கலாசார மண்டபத்தை முழுமையாக கட்டி முடித்து அச்சமூகத்தின் பாவனைக்கு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் ஆகியன தெரிவிக்கப்பட்டுள்ளன. (9-250)

## வீதிகளை புனரமைக்குக

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களிலுள்ள பிரதான வீதிகள் சேதமடைந்துள்ளமையால் போக்குவரத்து செய்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன்படி கிளிநொச்சி நகரிலிருந்து ஜெயபுரம் செல்லும் கனகபுரம் தொடக்கம் ஜெயபுரம் வரையான பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

இவ்வீதியை கோணாவில், யூனியன்குளம், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், பல்லவராயன் கட்டு, ஜெயபுரம் ஆகிய கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு இக் கிராமங்களின் உள் வீதிகளும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது.

சில கிரவல் வீதிகளுக்கு தார் போடப்பட்டுள்ள போதிலும் அதனால் பயணிக்க முடியாமலுள்ளது.

ஆகவே குறித்த வீதிகளை செப்பனிடுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-254)

# முல்லை.வலயக்கல்வி அலுவலக புதிய கட்டடத்தில் குறைபாடுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் புதிய அலுவலக கட்டடம் சீரான முறையில் அமைக்கப்படாமையினால் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக கல்வி வலயத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இக் கல்வி வலயம் இயங்கி வருகின்றது.

நிரந்தர கட்டடம் இல்லாமையினால் 2010 முதல் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை முல்லைத் தீவு இந்து வித்தியாலயத்தி லேயே தற்காலிகமாக இயங்கி வந்தது.

பின்னர் 2013 ஆம் ஆண்டு முல்லை தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கரைச்சி குடியிருப்பு கிராமத்தில் அமைக்கப்பட்ட நிரந்தர புதிய கட்டடத்திற்கு கல்வி வலயம் மாற்றப்பட்டு இன்றுவரை இயங்கி வருகின்றது.

எனினும் குறித்த கட்டடம் பல்வேறு




குறைபாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளமையால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அலுவலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கட்டடத்திற்கான வரை படத்தின் படி அலுவலகம் அமைக்கப்படாமையினாலேயே குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன.

இதன்படி கட்டடத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் தரமின்மையால் சுவர், நிலம் போன்ற இடங்களில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கட்டடம் கடலுக்கு செங்குத்தாக அமைக்கப்பட்டுள்ளமையினால், அலுவலகத்தில் பணியாற்ற முடியாதவாறு வெப்பநிலை காணப்படுகின்றது.

மாநாட்டு மண்டபம் இடப்பற்றாக் குறையாகவுள்ளதனால் வாராந்தம் இடம்பெறும் கல்வி அபிவிருத்தி கூட்டங்களை பாடசாலைகளில் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வெளி மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு விடுதிகளும் அமைக்கப்படவில்லை.

அலுவலகத்திற்கான மின்விநியோகம் மெல்லிய வடத்தினூடாக பாய்ச்சப்படுவதனால் அங்குள்ள இலத்திரனியல் சாதனங்களை இயக்குவதற்கு போதுமான மின்சாரத்தின் அளவு கிடைப்பதில்லை.

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, மணலாறு(வெலிஓயா) ஆகிய கல்வி கோட்டங்களும் 57 பாடசாலைகளைச் சேர்ந்த 19 ஆயிரத்து 332 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்ற நிலையில், கல்வி வலயத்தின் செயற்பாடு இன்றியமையாததாகும்.

எனவே, கல்வி வலயத்தின் அலுவலகத்தை சீராக அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியம்.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே கட்டடத்தை சீரான முறையில் அமைத்துத் தருமாறு முல்லைத்தீவு கல்வி சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA

# குருதிக் கொடையாளர்கள் ஆயிரத்து 500 பேர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச குருதிக் கொடையாளர்கள் நிகழ்வில் ஆயிரத்து 500 குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக யாழ்.போதனாவைத்தியசாலை இரத்த வங்கிக்கு பொறுப்பாகவுள்ள குருதி மாற்று வைத்திய நிபுணர் கே.சி.டி.செனிவரத்தின தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேசத்திற்கு உட்பட்ட குருதிக்கொடை நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் ஏற்பாட்டாளர்களுக்கிடையிலான கூட்டம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிய நாடுகளிலேயே முதன் முதலாக உலக குருதிக் கொடையாளர் தினத்தை கொண்டாடுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இம்முறை இலங்கையைத் தெரிவு செய்துள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் ஜுன் மாதம் 14 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு கொடையாளர்களை கௌரவிக்கும் வகையில் ஊர்தி வழியான கையெழுத்து வேட்டையும் இடம்பெறவுள்ளது.

இவ்வூர்தி எதிர்வரும் 4ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு தெல்லிப்பழை ஊடாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையும். இதன் பின்னர் குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஊர்தி வவுனியாவிற்குச் சென்று அநுராதபுரம் வழியாக கொழும்பைச் சென்றடையும்.

இவ்வாறு நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தும் கையெழுத்து வேட்டை இடம்பெறும்.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மாகாண சுகாதார அமைச்சர் பி. சத்தியலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2)



வெசாக் உற்சவத்தை முன்னிட்டு தபால் திணைக்களத்தின் முத்திரை பணியகத்தினால் நான்கு முத்திரைகள் வெளியிடப்பட்டன. மேற்படி ஞாபகார்த்த முத்திரைகள் தபால்மா அதிபர் டி.எல்.பீ.ரோஹன அபேரத்னவினால் பிரதமரின் அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் பிரதமர் தி.மு.ஜயரத்ன விடம் கையளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# கமலேந்திரன் உள்ளிட்ட மூவருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் உத்தரவிட்டார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் டானியல் றெக்ஷியின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதான சந்தேகநபராக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன் மற்றும் கொலை செய்யப்பட்ட டானியல் றெக்ஷியினின் மனைவி, ஆட்டோ சாரதி உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியன் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பில் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கமலேந்திரனை 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் வைத்து பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்திருந்தனர்.

அத்துடன் றெக்ஷியனின் மனைவி மற்றும் ஆட்டோ சாரதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# உலக புவி தினம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரால் உலக புவி தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பிரதேச சபை கலாசார மண்டபத்தில் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ரவி, சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலக உதவித்திட்டமிடல்பணிப்பாளர்வீ.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி திருச்செல்வி சிவானந்தன், டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி நிறுவன உரிமையாளர் த.தவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு நிகழ்வாக யாழ்.பல்கலைக்கழகம் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தலைமையில் இன்றைய நகராக்க செயல்முறைகள் நகர மீட்சித் திறனை வளர்த்தெடுக்கின்றன, வளர்த்தெடுக்க தவறிவிட்டன எனும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெறும்.ஓவியப் போட்டியில் பங்குபற்றியோருக்கு சான்றிதழ் வழங்கப்படும். (2)

# வெள்ளிக்கிழமையை விடுமுறைதினமாக்குக

வெள்ளிக்கிழமை தினத்தை பொது விடுமுறை தினமாக்குமாறு கோரி இந்து அரச ஊழியர்கள் இணையத்தின் வி.கே.தவபாலன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் , வெள்ளிக்கிழமை தினத்தை விடுமுறைதினமாக்கி அதற்குப்பதிலாகசனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமையை வேலை நாளாக்கும் படி கோருகின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரகாரம் தங்கள் கவனத்தைச் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் கே.கே. எஸ்.ஏ. பேரேரா பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் கேட்டுள்ளார். (அ)

# தென்கொரியாவில் இலங்கை விகாரைக்கு அடிக்கல் நாட்டல்

இலங்கை விகாரையொன்றை தென்கொரியாவில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது.

தென்கொரியா- இலங்கை மகா விகாரை எனப் பெயரிடப்பட்டுள்ள இவ்விகாரை தென்கொரியத் தலைநகர் சியோலிலிருந்து 80 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பியோங்டேக் நகரில் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

தென்கொரியாவுக்கான தூதுவர் திஸ்ஸ விஜேரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந் நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான இலங்கை பிரதிநிதிகள் மற்றும் அந்நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இருநாடுகளையும் சார்ந்த பௌத்த சமயத் தலைவர்கள் - மற்றும் சமய துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கும் தென்கொரியாவுக்கும் கடந்த 1977ஆம் ஆண்டு தொடக்கம் நல்லுறவு காணப்படுகிறது.

ஹெலமனேஆன்மீகதேவையைப் பூர்த்தி செய்வது மட்டும் நோக்கமல்ல. இரு நாடுகளின் மொழிகளின் நுணுக்கங்களை அறிதல், தியானப்பயிற்சி,கலாசாரப்பாரம்பரியங்களை பகிர்ந்துகொள்ளவும் இது ஏதுவாக இருக்கும் என திஸ்ஸ விஜேரத்ன தெரிவித்தார். (2)

# பாக்.கடற்படை கப்பல் இலங்கை துறைமுகத்தில்

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படையினரின் கப்பல் ஒன்று மூன்று நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள் தொடர்ச்சியாக நல்லெண்ண அடிப்படையில் இலங்கை துறைமுகத்தை வந்தடைந்தது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் அமையவுள்ளதாகவும், அந்த வகையில் இரு நட்பு நாடுகளுக்கும் இடையிலுள்ள வலுவான பாதுகாப்பு, கலாசார, பொருளாதார, இராஜதந்திர உறவுகளை பி.என்.எஸ்.சாம்ஷீர் என்ற இந்தக் கப்பலின் பயணம் வெளிப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# இராணுவத்தின் பிரதம அதிகாரியாக பிரசாத் சமரசிங்க நியமனம்

இலங்கை இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க எதிர்வரும் 16ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இலங்கை இராணுவத்தின் சுயேட்சை படைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக பிரசாத் சமரசிங்க கடமையாற்றி வந்தார்.

1980ஆம் ஆண்டு கெடட் அதிகாரியாக இராணுவத்தில் இணைந்து கொண்ட பிரசாத் சமரசிங்க, கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவராவார்.

பிரசாத் சமரசிங்க நீண்டகாலமாக இராணுவப் பேச்சாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பின்னர் பிரித்தானியாவுக்கான பாதுகாப்புத்துறை அதிகாரியாகவும் இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றியிருந்த சமரசிங்க, விக்கிலீக்ஸ் சர்ச்சையில் சிக்கி சிறிது காலம் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்புக்கு உட்பட்டிருந்ததாக தெரியவருகின்றது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



## கந்தையா அன்னலிங்கம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னலிங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Highland Funeral Home & Cremation Centre-Scarborough Chapel, 3280 Sheppard Avenue East, Scarborough, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி சுப்பிரமணியக்குருக்கள் செம்பற்சோதி

காரைநகரைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியக் குருக்கள் செம்பற்சோதி கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## சண்முகராசா தர்மபாலன்

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா தர்மபாலன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Am Waldfriedhof 1,71229, Leonberg, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி தர்மலிங்கம் நாகரெத்தினம்

பருத்தித்துறை தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிகவசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நாகரெத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு 95, Rue Marcel Sembat,93430 Villetaneuse,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.அமைதிப்படையில் பெண் கொமாண்டர் நியமனம்



(நியூயோர்க்)

ஐ.நா. அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் சைப்ரஸ் பகுதியில் நடைபெறும் அமைதி பாதுகாப்புப் பணிக்கு முதல் பெண் தளபதியை நியமிப்பதாக நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டார்.

நோர்வேயைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கிறிஸ்டின் லுண்ட் வரும் ஒகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முதல் சீனாவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாவோ லியுவிடமிருந்து இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொறுப்பினை ஏற்பதாக அறிவித்தபின்னர் கிறிஸ்டின் லுண்ட் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா அமைப்பின் தலைமை அலுவலகத்தில் ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனையும், அமைதிப் பணிக்கான உள்துறை பொதுச் செயலரான ஹெர்வ் லாட்சசையும் சந்தித்தார்.

துருக்கியின் சைப்ரஸ் பிரிவுக்கும், கிரீசிற்கும் இடையில் உள்ள 112 மைல் நிலப்பரப்பும், 900 இராணுவத்துருப்புகள் அடங்கிய பொலிசும் இவரது கண்காணிப்பின் கீழ் செயற்படும்.

# சோமாலியாவில் குண்டுவெடிப்பு

## 10 பேர் உயிரிழப்பு



(மொகடிஷு)

பஞ்சத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவின் தெற்கு பகுதியில் உள்ள பய்டோவா நகரில் பயங்கர குண்டு வெடித்தது. இதில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

மூத்த அதிகாரி ஒருவர் வந்த டிரக்கை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. மருத்துவமனைக்கு 6 உடல்கள் கொண்டு வரப்பட்டதாகவும், காயமடைந்தவர்களில் 3 பேர் மருத்துவமனையில் இறந்ததாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். மேலும் ஒரு உடலை சம்பவ இடத்தில் இருந்து உறவினர்கள் எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், அரசுக்கு எதிராக தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வரும் ஷெபாப் தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அல்கொய்தாவுடன் தொடர்புடைய ஷெபாப் தீவிரவாத இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கப்பட்ட பய்டோவா நகரம், தற்போது ஆபிரிக்க ஒன்றிய படையினரின் ஆதரவுடன் கூடிய அரசு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இருப்பினும் அவ்வப்போது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு பின்னடைவு ஏற்பட்டு வருவதால் சமீபகாலமாக அரசு அதிகாரிகள் மற்றும் அரசுப் படைகளை குறிவைத்து தாக்குவது குறிப்பிடத்தக்கது.

# புதிய இந்திய பிரதமருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

## ஒபாமா தெரிவிப்பு

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா தனது மிகப் பெரிய தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதற்காக இந்தியாவிற்கும், இந்திய மக்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்து தெரிவித்துள்ளார். தலைநகர் டில்லியில் புதிதாக அமையவுள்ள அரசுடன் நெருக்கமான உறவுடன் பணியாற்ற உள்ளதாகவும் அவர் உறுதி அளித்துள்ளார்.

இந்திய லோக்சபா தேர்தல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது,

தேசிய தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ள இந்திய மக்களுக்கு எனது வாழ்த்துக்கள். வரலாற்றில் மிகப் பெரிய ஜனநாயக தேர்தலை நடத்தியதன் மூலம் உலக நாடுகளுக்கு ஜனநாயக வழிகாட்டியாக இந்தியா திகழ்கிறது. இதன் மூலம் தனது பன்முக தன்மை மற்றும் சுதந்திரன் மதிப்பை இந்தியா பிரதிபலித்துள்ளது. இந்தியாவின் தேர்தல் செயற்பாடுகளையும், வெளியாக உள்ள தேர்தல் முடிவுகளையும் நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு அமையவுள்ள இந்தியாவின் புதிய அரசு நிர்வாகத்துடன் வருங்காலத் தில் நெருக்கமான உறவுடன் ஒத்துழைப்பு தந்து பணியாற்ற விரும்புகிறோம் என ஒபாமா தெரிவித்துள்ளார்.



ஈரான் சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், தலைநகர் டெஹ்ரானில், ஈரான் ஜனாதிபதி அயோதொல்லா அலி காமினேயை சந்தித்துப் பேசுவதனை படத்தில் காணலாம்.

# கடத்தப்பட்ட மாணவிகளை விடுவிக்க தீவிரவாதிகள் நிபந்தனை

(அபுஜா)

நைஜீரியாவில் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில் கடந்த மாதம் (ஏப்ரல்) 14ஆம் திகதி பள்ளி விடுதியில் இருந்து 276 மாணவிகளை போகோ ஹாரம் தீவிரவாதிகள் கடத்தி சென்று மறைவிடத்தில் சிறை வைத்துள்ளனர்.

அவர்களை "விலை மாதுக்களாக விற்க போவதாக மிரட்டல் விடுத்தனர். இது உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

நைஜீரிய இராணுவத்தால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அதை தொடர்ந்து அவர்களை மீட்க அமெரிக்கா இராணுவத்தை அனுப்பியுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் "போகோஹாரம்" தீவிரவாதிகள் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளனர்.

அதில், கடத்தப்பட்ட மாணவிகளில் 130 பேர் மட்டும் அதில் தோன்றினர்.

அதில், அவர்கள் கிறிஸ்தவ மதத்தில் இருந்து இஸ்லாமுக்கு மாற்றப்பட்டிருந்தனர்.



அவர்கள் உடல் முழுவதும் மறைத்த நிலையில் நீண்ட "பர்தா" போன்ற உடை அணிந்திருந்தனர்.

வீடியோவில் தீவிரவாதிகளின் தலைவர் அபுபக்கர் ஷெகாவு தோன்றி பேசினார்.

அதில், "கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள எங்களது இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் மாணவிகளை விடுதலை செய்ய முடியாது" என திட்டவட்டமாக கூறினார். ஆனால், இதற்கு நைஜீரியா அரசு மறுத்து விட்டது. தீவிரவாதிகளின் கோரிக்கையை ஏற்க முடியாது என உள்துறை மந்திரி அப்பா மோரோ தெரிவித்துள்ளார்.

இதனால், நைஜீரியாவில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

# உக்ரைன் பிரிவினைக்கு பெருமளவானோர் ஆதரவு

கிழக்கு உக்ரைனின் டொனெட்ஸ்க், லுகன்ஸ்க் ஆகிய மாகாணங்கள் உக்ரைனில் இருந்து பிரிந்து செல்வது குறித்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பிரிவினைக்கு ஆதரவாக 90% பேர் வாக்களித்துள்ளனர்.

உக்ரைனின் தன்னாட்சி பகுதியாக செயற்பட்டு வந்த கிரிமியாவில் கடந்த மார்ச் மாதம் திடீரென கிளர்ச்சி ஏற்பட்டது.

உக்ரைன் அரசுக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடத்திய கிளர்ச்சியாளர்கள், கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பது குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்தினர்.

இதில் ரஷ்யாவுடன் இணைவதற்கு பெரும்பாலானோர் ஆதரவு தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து கிரிமியா பகுதி ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யா மீது அந்நாடுகள் பொருளாதார தடையும் விதித்தன.

இந்நிலையில் கிரிமியாவை தொடர்ந்து உக்ரைனின் கிழக்கு பகுதியிலும் டொனெட்ஸ்க், லுகன்ஸ்க் மாகாணங்களில் கிளர்ச்சி ஏற்பட்டது.

அங்குள்ள 12 நகரங்களில் உள்ள அரசு கட்டடங்களை ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதன் உச்சகட்டமாக டொனெட்ஸ்க், லுகன்ஸ்க் மாகாணங்கள் இரண்டும் உக்ரைனில் பிரிந்து செல்வது குறித்து கிளர்ச்சியாளர்கள் தன்னிச்சையான பொது வாக்கெடுப்பை நடத்தினர்.

இந்த பொதுவாக்கெடுப்பில் பிரிவினைக்கு ஆதரவாக 90% பேர் ஆதரவு தெரிவித்துள்ளதாக கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஆனால் இந்த வாக்கெடுப்பை உக்ரைன் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நிராகரித்துள்ளன.

# பக்தாத்தில் தொடர் கார்க்குண்டு வெடிப்பு

## 19 பேர் உயிரிழப்பு

(பக்தாத்)

பக்தாத்தில் தொடர் கார் குண்டு வெடிப்பில் 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட அந்நாட்டு அரசு அரும் பாடுபட்டு வரும் நிலையில் இம் மாதிரியான குண்டுவெடிப்புகள் அதற்கு பெரும் பினனடைவை தருகிறது.

அந்நாட்டின் முக்கிய இஸ்லாமிய புனித தியாகியான ப்ரொபட் முகமதுவின் மருமகனான இமாம் அலியின் பிறந்த நாளை மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. பக்தாத் அருகேயுள்ள சத்ர் நகரில் நடைபெற்ற முதல் கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 4 பேர் பலியானதுடன் 6 பேர் காயமடைந்தனர்.

சத்ர் நகரின் மற்றொரு பகுதியான குடியிருப்புகள் நிறைந்த இடத்தில் மீண்டும் கார் குண்டு வெடித்ததில் 2 பேர் பலியானதுடன் 7 பேர் படுகாயமடைந்தனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தை அந்நகரில் உள்ள ஒரு தொலைக்காட்சி நிறுவனம் பதிவு செய்து ஒளிபரப்பியது. அதில் கார்களில் குண்டு வெடித்தவுடன் அவை தீப்பிடித்து எரிந்ததுடன் அப்பகுதியே புகை மண்டலமாக காட்சியளித்தது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் பக்தாத் நகரின் கிழக்கிலுள்ள ஜமீலா மாவட்டத்தில் மற்றொரு கார் குண்டு வெடித்ததில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், 10 பேர் படுகாயமடைந்தனர். அதே போல் கிழக்கு பக்தாத்தில் நடைபெற்ற மற்றொரு கார் குண்டுவெடிப்பில் போக்குவரத்து பொலிஸ்நிலையம் ஒன்று முற்றிலும் சேதமடைந்தது. அதில் ஒரு போக்குவரத்து பொலிஸார் உட்பட மூன்று பேர் பலியானார்கள். மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். இது தவிர மேலும் சில இடங்களிலும் தொடர் கார் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

விண்ணுற அடுக்கிய விறகின் வெந்தணல்
நுண்ணிய தீ புகல் ஒன்றுமில்லையாம்...
~ திருநாவுக்கரசர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அகம்பாவம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு

ஞானம் பெறுதல் என்பது நல்லறிவு கைவரப்பெறுவதைக் குறிப்பதாகும். இந்த உலகில் பிறந்து ஞானமுக்தி பெற்றவர்கள் அனைவரும் அகம்பாவம் அகல்விக்கும் நல்லறிவைப் பெற்றவர்கள் என்பது உணரப்படவேண்டும்.

"அகம்பாவம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" என்ற வாசகத்தைத் தந்த மாணிக்கவாசகர் சாயுச்சியம் என்னும் ஞானமார்க்கத்துக்கான அதி உச்சப் பேற்றைப் பெற்றவர். அவரின் முடிவு, இறைவன் வேறெங்குமில்லை அவர் எமக்குள் இருக்கிறார் என்பதாகும்.

"...ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே..." என்ற வாக்கு ஞானிகளின் உள்ளத்தில் இறைவன் ஒளிமயமாக இருக்கின்றான் எனப் பொருள்படும்.

ஆக, நமக்குள் இருக்கின்ற இறைவனை நாம் உணரவேண்டும். அவ்வாறு உணருகின்ற போது; நான், எனது, என்னுடையது என்ற ஆணவத்தன்மைகள் அகன்று போகும்.

நம்மைப் பீடித்துள்ள மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பன விலகிப் போக; பற்றற்றவனாகிய பரம்பொருளின் ஞான அறிவு நம்மை வழிப்படுத்தும். இதனையே சிவ புராணத்தில் மாணிக்கவாசகர் விளக்குகிறார்.

63 நாயன்மார்களில் அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர் ஞானத்தின் பேறாகிய சாயுச்சிய பதவியை பெற்றவர் என்பதற்குள் இருக்கக் கூடிய தத்துவம் அற்புதமானது.

மன்னனாக, மந்திரியாக இருக்கின்றவர்கள் தமது பதவியை தமக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதவேண்டும். அவ்வாறு கருதுவது ஏனெனில், மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் நாட்டில் அமைதியை, சமாதானத்தை, சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்குமான பொறுப்பான பதவியாக அவை இருப்பதாலாகும்.

இங்குதான் மந்திரியாக இருந்த மாணிக்கவாசகரின் பணிநிலை பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அரண்மனைக்குக் குதிரை வாங்கச் சென்ற அவர், தான் எடுத்துச் சென்ற செல்வங்களை ஞானநல்லறிவை ஏற்படுத்தும் பொருட்டு சிவனடியார்க்கு செலவிடுகிறார்.

ஆக; மன்னன், மந்திரி, படைத்தளபதிகள் என்போர் உல்லாசமாக குதிரையேறி சவாரி விடுவதைக் காட்டிலும் சாதாரண மக்கள் நன்மை பெறுவதே முக்கியம் என்று உணர்ந்ததன் காரணமாக மந்திரி மாணிக்கவாசகர் அரச சொத்தை மக்களின் நலனுக்காகச் செலவிட்டார். அவர் தன்னிடம் இருக்கக் கூடிய அதிகாரத்தை மக்கள் நலன் கருதி பிரயோகித்தமையால் அவருக்கு இறைவனால் சாயுச்சிய பதவி கிடைக்கலாயிற்று.

எனவே, நாட்டில் நல்லதை ஏற்படுத்துகின்ற பொறுப்பு அதிகாரத்தில் இருப்பவர்களிடம் நிறைவே உண்டு.

அகமும் புறமும் அமைதியை குலைத்துவிட்டு, எத்தனை கொண்டாட்டங்களைக் கொண்டாடினாலும் அவை வெறுமையான வேடிக்கையாக முடியுமேயன்றி, அவற்றால் வேறு எந்தப் பயனும் கிடைக்க மாட்டா.

ஆம், கௌதம புத்தபிரான் மகா ஞானம் பெற்ற நன்னாளில் நான் மட்டும் வாழ, என் இனம் மட்டும் வாழ, என் மொழியும் என் மதமும் மட்டுமே கோலோச்ச வேண்டும் என்ற சின்னத்தனங்களை ஒழித்து, எல்லா மக்களும் இன்புற்று வாழ வேண்டும்.

மற்றவர்களின் இழப்புக்கள் துன்பங்களில் எங்களின் மரியாதைகளும் மதிப்புகளும் இருக்க வேண்டும் என்ற சிந்தனைகளும் ஓங்கட்டும்.

கௌதம புத்தபிரான் தன் வழிபடுநர்களுக்கு இத் தாராள மனப்பாங்கைத் தந்து, சமய அனுட்டானங்கள் ஊடாக பேராதிக்கத்தை நிலை நிறுத்தும் குறியீட்டு மொழிகளை வேரறுத்து; சாந்தி, சமாதானத்தை ஏற்படுத்த திருவருள் பாலிப்பாராக.

# முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் புலம்பெயர் நாடுகளில் அனுஷ்டிப்பு

ஈழத் தமிழினத்தின் மீதான அரசின் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் உச்சமாக அமைந்த முள்ளிவாய்க்கால் பெருவலியின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தினை முன்னிட்டு புலம்பெயர் தேசமெங்கும் தொடர் கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மே-18 இனை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் பன்முகச் செயறபாடுகளின் ஓர் அங்கமாக தமிழர்களுக்கான பரிகார நீதிகோரி, பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன் தொடர் கவனயீர்ப்பு நிகழ்வொன்று, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் மற்றும் பண்பாட்டு விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன் தொடங்கியுள்ள கவனயீர்ப்பு நிகழ்வானது மே 12 திகதி திங்கட்கிழமை முதல்வாரம் முழுவதும் காலை 9 மணி முதல் மாலை 9 மணிவரை இடம்பெறுகின்றது.

கண்காட்சி, புறக்கணிப்பு விழிப்பூட்டல் பரப்புரை, துண்டுப்பிரசுர விநியோகம், கவிதை, உரை என பல்வேறு வடிவங்களில் ஈழத்தமிழினத்துக்கு நடந்தேறிய இனப்படுகொலைக்கு பரிகார நீதிகோர அமையும் இந்த கவனயீர்ப்பு நிகழ்வில் ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிக்கு தெருவெளி நாடகமும், சுடரேந்திய வணக்க கூடலும் இடம்பெறுகின்றது.

இதேவேளை வரும் மே 17-ம் திகதி சனிக்கிழமை லண்டனில் இடம்பெறவுள்ள இலங்கை புறக்கணிப்பு மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. (எ-11)

# அலங்கார திருவிழா

வாதரவத்தை கேதுவுப்பிள்ளையார் தேவஸ்தான அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும். பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மாலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் முத்துச் சப்பரத்தில் வீதியுலா வரும் திருக்காட்சி இடம்பெறும்.

இரவு கலைநிகழ்வுகளாக இசைச் சங்கமம் மற்றும் ரி.எஸ்.செல்வரஞ்சன் குழுவினரின் நாதஸ்வர கானாமிர்தமும் இடம்பெறும். (எ-2)

# பரிசளிப்பு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் திருமதி பிரதா கிரிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வித்திணைக்கள ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் நாகப்பர் கந்ததாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

யா/மயிலணி முருகமூர்த்தி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வ.உமாசுதக் குருக்கள் ஆசியுரையினை வழங்குவார். (எ-2)

# கட்டிடங்கள் திறப்பு விழா

கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தின் நூல்நிலையம், சனசமூக நிலையம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் புதிய கட்டிட திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30-க்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி இ.மோகன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், மூத்த உறுப்பினர் பொ.மகேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலாஜோதி கலையரங்கத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சிவயோக முனீஸ்வரர் தேவஸ்தானத்தில் சிறப்பு பூசை நடைபெற்று [illegible] நிகழ்வுகள் ஆரம்பமாகும். (எ-2)

# இணையத்தளத்துக்கு நாட்டில் தடைவிதிப்பு

(கொழும்பு)

மற்றொரு செய்தி இணையத் தளத்துக்கும் இலங்கையில் நேற்று முதல் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. 'Sri Lanka Mirror' என்ற இணையத் தளமே இணையச் சேவை வழங்குநர்களால் இலங்கையில் பார்க்க முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கின்றது.

தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரிலேயே குறிப்பிட்ட இணையத் தளம் தடுக்கப்பட்டிருப்பதாக இணையத்தள சேவை வழங்குநர்கள் தெரிவித்தார்கள்.

இதனையடுத்து தமது இணையத் தளம் தடுக்கப்பட்டமை குறித்து பணிப்பாளருக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்த இணையத்தள உரிமையாளர்கள், அதன் பிரதிகளை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், ஊடகத்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளனர். (எ-11)

# சிங்கப்பூர் செல்வதற்கு துமிந்தவுக்கு அனுமதி

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுக்கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. துமிந்த சில்வாவின் கடவுச் சீட்டு உயர் நீதிமன்றின் பொறுப்பில் உள்ளது.

இந்த நிலையில், சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு துமிந்தவின் சட்டத்தரணி உயர் நீதி மன்றில் நேற்று கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்ற நீதவான் லலித்ஜயசூரிய, கடவுச் சீட்டை ஆறு வார காலங்களுக்கு விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதன்படி, துமிந்த ஆறு வார காலம் சிகிச்சைக்காக சிங்கப்பூர் பயணம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# கண்ணீர் சிந்த பணியாளர்கள் மன்மோகனுக்கு பிரியாவிடை

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, பிரதமர் அலுவலக ஊழியர்கள் சுமார் 110 பேர், சௌத் ப்ளாக்கில் எழுந்து நின்றபடி பிரியாவிடை கொடுத்தனர்.

நெகிழ்ச்சியான இந்த நிகழ்வின் போது, சிலரது விழிகளில் கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்த்தன என த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மே 17-ம் திகதி பிரதமர் பதவியில் இருந்து விடைபெறும் மன்மோகன் சிங்குக்கு நேறறு பிரதமர் அலுவலக ஊழியர்கள் பிரியாவிடை கொடுத்தனர்.

பிரதமர் பதவியை 10 ஆண்டு காலமாக வகிக்கும் மன்மோகன் சிங்குக்கு, பிரதமர் அலுவலகம் பிரியாவிடை வழங்கிய நிகழ்வு மிகவும் நெகிழ்ச்சிக்குரியதாக இருந்தது.

உங்கள் அனைவரின் பணிகளுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பார் என்று பிரதமர் அலுலக ஊழியர்களிடம் நெகிழ்ச்சியுடன் கூறினார் மன்மோகன் சிங்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 10 ஆண்டு காலம் பிரதமராக இருந்த மன்மோகன் சிங்கை, ஊழியர்கள் சிலர் கண்ணீர் மல்க வழியனுப்பினர்.

அப்போது, பிரதமர் மன்மோகன் சிங்குடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், முதன்மைச் செயலர் புலோக் சாட்டர்ஜி, பிரதமரின் ஆலோசகர் டி.கே.ஏ. நாயர் மற்றும் பிரதமரின் ஊடக ஆலோசகர் பங்கஜ் பச்சௌரி ஆகியோர் உடன் இருந்தனர். (எ-11)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தூய்மை காப்போம்



✦ இளமையான மூங்கிலை எளிதில் வளைக்க முடியும். அதுபோல, இளம்வயதிலேயே மனதை கடவுள் பக்கம் திருப்பி விடுங்கள்.

✦ மனித மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. உலக விடயத்தில் ஈடுபட்டு சிதறி நாலாபுறமும் ஓடினால் ஒன்று சேர்ப்பது எளிதல்ல.

✦ பேசுவது யாருக்கும் எளிமையானது. ஆனால், அதைப் பின்பற்றி நடப்பது மிகவும் கடினமானது.

✦ மனமே கடவுள் குடியிருக்கும் வீடு. எப்போதும் அதன் தூய்மை காப்பது அவசியம்.

✦ தன்னைத் தானே ஒருவன் திறமைசாலி என்று கருதிக் கொள்வது முட்டாள்தனமான செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி

வடமத்திய மாகாண துடுப்பாட்ட சங்கம் நடத்தும் மாவட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி மே 31 ஆம் திகதியும் ஜூன் முதலாம் திகதியும் ரண்கிரி டம்புள்ள சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட அணியை தெரிவு செய்வதற்கு யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களில் இருந்து 25 வயதுக்குட்பட்டோரில் 3 வீரர்களையும் 25 வயதுக்கு மேற்பட்டோரில் 2 வீரர்களையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளனர். இவ் அணியின் பயிற்சிகளை மாவட்ட பயிற்றுநர் லக்சித ஹெரத் மேற்கொண்டுள்ளார். பயிற்சி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்க செயலாளர் மேற் கொண்டுள்ளார்.

எனவே போட்டியோடு தொடர்புபட்டோர் அதற்கேற்ப முன் ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க)



கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிகல்லூரியில் இடம்பெற்ற மாவட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் உடற்பயிற்சி அணி போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அந்தோனிஸ் கல்லூரி வெற்றி பெற்று தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் மாவட்ட சம்பியனாக வந்துள்ளது.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்; கே.சீ.சீ.சீ.அணி முன்னிலையில்

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து 5 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2014 தொடக்கம் 31.03.2014 வரை 22 போட்டிகள் நடைபெற்று முடிந்தன.

அவற்றுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கே.சீ.சீ.சீ அணி 7 போட்டிகளில் பங்கு பற்றி 6 போட்டிகளில் வெற்றி பெற்று 40.85 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் யாழ்.பல்கலைக்கழக அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றிபெற்று 37.66 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும் யாழ்.மத்தி அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 23.82 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தையும் கிறாஸ் கொப்பர்ஸ் அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றிபெற்று 22.00 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்தையும் பற்றீசியன்ஸ் அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 21.39 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்தையும் ஸ்ரீகாமாட்சி அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 14.04 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்தையும் யாழ்.ஜொனியன்ஸ் அணி 3 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று 11.95 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்தையும் சென்றலைட்ஸ் அணி 2 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று 6.30 புள்ளிகளைப்பெற்று 8 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க)

# இன்றைய போட்டிகள்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று புதன்கிழமை கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதன்படி காலை 8 மணிக்கு அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அடுத்து 10 மணிக்கு உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குமரன் சண்றைசர்ஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து பிற்பகல் 12.30 மணிக்கு வின்டோஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி பாரதி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு மீசாலை எம்.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி பாரதி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

இறுதியாக பிற்பகல் 4 மணிக்கு சங்கத்தானை மீனாட்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மீசாலை சீமா விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

போட்டிகள் யாவும் உரிய நேரத்தில் ஆரம்பமாகவுள்ளதனால் அனைத்து கழகங்களும் உரிய நேரத்தில் சமுகமளித்து போட்டிகள் சிறப்பாக இடம்பெற பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# JPL இன் இன்றைய போட்டி

யுவர் பிரண்ட் பவுண்டேசனால் நடத்தப்படும் ஜப்னா பிரிமியர் லீக்கில் இன்று காலை 8 மணிக்கு யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து மதியம் 11 மணியளவில் மூளாய் விக்ரோரி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு அரியாலை சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

# யாழின் சாதனையாளர்கள்





இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வீராங்கனை ஜே.அனித்தா சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டியில் 18 வயதுப் பெண்கள் கோலூன்றிப் பாய்தலில் 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து அனித்தா இந்தச் சாதனையினை நிகழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்னர் 2.95 மீற்றர் பாய்ந்ததே சாதனையாக இருந்தது.

இதேவேளை ஆண்கள் பிரிவில் யாழ். அளவெட்டி அருணோதயா கல்லூரியை சேர்ந்த மாணவனான கருணாகரன் நத்தலின் ஜோய்ஸன் 3.96 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

# சென்.ஸ்ரார் வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் அராலி ஏ.எல் இளைஞர் கழகமும் அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகமும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டிகளை அராலி ஏ.எல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இதில் அண்மையில் இடம்பெற்ற போட்டிகளில் சென்தோமஸ் விளையாட்டுக் கழகமும், சென்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றது.

இடம்பெற்ற முதலாவது போட்டியில் மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சென்தோமஸ் விளையாட்டுக் கழகமும் மோதியது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பத்திலேயே கோல் ஒன்றைப் போட்டது.

பதிலுக்கு இரு அணிகளும் கோல் போட முயற்சித்தது. இதனால் இரு அணிகளும் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கி மேலுமொரு கோலைப் போட்டன. இதனால் 2:1 எனனும் கோல் கணக்கில் மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி வென்றது.

மற்றைய போட்டியில் சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

இப் போட்டியில் 3:2 என்னும் கோல் கணக்கில் சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (க-23)







ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 26 ஆவது பிரதேச இளைஞர் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், கரப்பந்தாட்டப் போட்டியின் ஒரு பகுதியையும், வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# பெங்களூர் வெற்றி



டெல்லிக்கு எதிரான போட்டியில் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணியின் அணித்தலைவர் பீட்டர்சன் முதலில் களத் தடுப்பை தேர்வு செய்தார். இதனையடுத்து களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்கள் எடுத்தது.

பெங்களூரு அணி சார்பாக கெய்ல் 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பார்த்திவ் படேல் (29) ஓரளவு கைகொடுத்தார். கப்டன் கோஹ்லி 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டி வில்லியர்ஸ் 33 ஓட்டங்கள் எடுத்தார். அதிரடியில் மிரட்டிய யுவராஜ் அரை சதம் கடந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய டெல்லி அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூர் அணியின் யுவராஜ் சிங் தெரிவானார். (க)






# வலி.வடக்கு மக்களுக்கு 3 வருடங்களின் பின் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வரும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கான உலர் உணவு வழங்கும் நடவடிக்கையை கடந்த 3 வருடங்களாக அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ள நிலையில் நேற்றையதினம் 84 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டினிச்சாவினை எதிர்கொண்டுள்ள வலி.வடக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நலன் புரி நிலையங்களில் தங்கிவாழ்ந்து வரும் மக்களுக்கு நிவாரணத்தை யாவது வழங்குமாறு அந்த மக்கள சார்பாக அர்சிடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அரசாங்கம் அதற்கு செவிசாய்க்கவில்லை. இந்நிலையில் வலி.வடக்கு மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபால சிங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்திற்கு மேற்படி விவகாரம் கொண்டுவரப்பட்ட நிலையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஊடாக நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபபட்டுள்ளது என்றும் நேற்றைய தினம் முதற்கட்டமாக 84 குடும்பங்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டதாகவும் மிகுதி 20 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவுள்ளதா கவும், இதேவேளை நலன்புரி நிலையத்திலுள்ள ஏனைய மக்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக்குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் உடுவில் கிளையில் வைத்து நேற்றைய தினம் நிவாரணம் வழங்கப்பட்ட போது வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள், வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர், வடக்கு மாகாண முதலமைச்சரின் கணக்காளர் உள ளிட்ட பலர் பங்குகொண்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 24 வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களைவிட்டு இந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## கௌரவிப்பு விழா

நிழல் அமைப்பின் நிறுவுனர் குழந்தைவேலு சோமசுந்தரம் சமாதான நீதவானாக நியமனம் பெற்றமைக்கான கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயம் மண்டபத்தில் நடைபெறும்.

நிழல் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விழா நாயகனுக்கான வாழ்த்துரைகளும் கௌரவிப்பும் இடம்பெறும். (ந)

# ராஜஸ்தான் றோயல்ஸை வென்று முதலிடத்தை பிடித்தது சுப்பர் கிங்ஸ்



ராஜஸ்தான் அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது.

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிக்கான நேறறைய லீக் ஆட்டத்தில் சென்னை அணியும், ராஜஸ்தான் அணியும் மோதின. போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ராஜஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக அங்கித் சர்மாவும், வோட்சனும் களமிறங்கினர். இருவரும் ஆரம்பம் முதலே அடித்து ஆடினர். மோகித் ஷர்மா வீசிய ஆட்டத்தின் 4-வது ஓவரில் தொடர்ந்து இரு பவுண்டரிகள் விரட்டி அங்கித் சர்மா அசத்தினார். ஆட்டத்தின் 8-வது ஓவரில் அணியின் ஸ்கோர் 60 ஆக இருக்கும் போது 30 ஓட்டங்கள் எடுத்திருந்த அங்கித் சர்மா அஷ்வின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ரகானே 4 ஓட்டங்களில் ரன் அவுட்டாகி நடையை கட்டினார்.

ஆட்டத்தின் 13-வது ஓவரில் அணியின் ஸ்கோர் 99 ஓட்டங்களை [illegible] ஓட்டங்கள் எடுத்திருந்த வோட்சன், மோகித் சர்மா பந்துவீச்சில் போல்டானார். அதன் பின் வந்த நாயரும் சொற்ப ஓட்டங்



களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஸ்ருவேர்ட் பின்னி மட்டும் சிறிது நேரம் களத்தில் நின்று 22 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மற்றைய வீரர்களான ஸ்மித் 9 ஓட்டங்களிலும், போல்க்னர் ஒரு ஓட்டங்களிலும் பாட்டியா 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

7-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய யாக்னிக் 4 ஓட்டங்களிலும் 9-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய கூப்பர் ஓட்டம் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ராஜஸ்தான் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் எடுத்தது.

வெற்றிக்கு 149 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை நோக்கி சென்னை அணி தனது இன்னிங்சை தொடங்கியது. அந்த அணியின்தொடக்க ஆட்டக்காரர்களாக டுவெய்ன் ஸ்மித்தும், மக்கலமும் களமிறங்கினர்.

ஆட்டத்தின் 3-வது ஓவரில் மக்கலம் 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ரெய்னா 2 ஓட்டங்களில் அரங்கு திரும்பினார். அதிரடியாக ஆடி வந்த ஸ்மித் 35 பந்துகளில் 44 ஓட்டங்கள் குவித்து கூப்பர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய டூ பிளசிஸ் அடித்து ஆடி ஓட்டங்களை சேர்த்தார். எனினும் இவருடன்ஜோடி சேர்ந்த அஸ்வின் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டூ பிளசிசும் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் கப்டன் தோனியும், ரவீந்திர ஜடேஜாவும் முறையே 26 மற்றும் 11 ஓட்டங்கள சேர்த்து ஆட்டமிழக்காமல் நின்று அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றனர். இறுதியில் 19.4 ஓவரில் 5 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 149 ஓட்டம் குவித்து சென்னை அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் ஜடேஜா தெரிவானார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சி அமைக்கும்...

கட்சி படுதோல்வியைச் சந்திக்கும் என கருத்துக் கணிப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகளில் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அதிக தொகுதிகளைக் கைப்பற்றும் எனவும் இக்கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இக்கருத்துக் கணிப்புக்களின் படி பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி தலைமையிலான கூட்டணிக்கு குறைந்தபட்சம் 249 தொகுதிகளில் இருந்து அதிகபட்சம் 300 தொகுதிகள் வரை கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க கூட்டணிக்கு குறைந்தபட்சம் 7 தொகுதிகளில் இருந்து அதிகபட்சம் 11 தொகுதிகள் வரை கிடைக்கும் எனவும், தே.மு.தி.க, பா.ம.க மற்றும் ம.தி.மு.க ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ள பாரதிய ஜனதாக் கூட்டணி 4 இல் இருந்து 6 தொகுதிகளைக் கைப்பற்றும் எனவும் இக்கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடையும் என உறுதியாக தெரிவித்துள்ள எல்லாக் கருத்துக் கணிப்புகளும், பாரதிய ஜனதாக கட்சி ஆட்சி அமைக்கப் போவதை உறுதிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இக்கருத்துக் கணிப்புகள் தொடர்பில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி நேற்றுமுன்தினமிரவு புதுடிலலியில் கட்சியின் மூத்த தலைவர்களுடன் தவ்ிர ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதன்போது இத்தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்ற சோனியா காந்தி, எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்க திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (எ-11)

## அமைச்சர் ரிசாத் மீது காடழிப்புக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியூதீன் காடழிப்பில் ஈடுபட்டுள்ளதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

மக்களைக் குடியேற்றுவதற்காக வனவிலங்க சரணாலயங்களுக்கு சொந்தமான பாரியளவிலான காணிகளை பயன்படுத்தியுள்ளதாக அமைச்சர் ரிசாத் மீது குற்றம் சுமத்தப்பட்டுளளது.

சுற்றாடல் நீதிக்கான மையம், சுற்றாடல் பாதுகாப்பு அறக்கட்டளை, இயற்கை வளங்களுக்கு பௌத்த பேரவை மற்றும் இலங்கை சுற்றாடல் காங்கிரஸ் ஆகிய நான்கு சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் கூட்டாக இணைந்து தெரிவித்துள்ளன.

அமைச்சர் பதியூதீன் சுமார் 18000 ஏக்கர் காணியை சட்டவிரோத மான முறையில் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளன. (எ-11)

## இராணுவ...

இயந்திரம் திருத்தல், மின்சாரம் ஆகிய துறைகளுக்கு ஆட்சேர்க்கும் பணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டத்தில் 50 வரையிலானவர்கள் இராணுவத்தில் சேர்வதற்காக விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கு அடுத்தகட்ட நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு அதில் தகுதிபெறுபவர்கள் தெரிவுசெய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று ஒட்டுசுட்டான், புதுமாத்தளன், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலும் அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

ஏற்கெனவே இராணுவத்துக்கு தமிழ் பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தமது சொந்த இடங்களிலேயே அவர்களது குடும்பங்களுக்கு நெருக்கமான இடங்களில் பணிபுரிந்து வருகின்றனர் என இராணுவம் தெரிவித்துள்ளது. (எ-11)

## இலங்கை...

தமிழ் அகதிகள் வெளிநாட்டவர்கள் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையிலேயே, இந்திய மத்திய அரசின் இந்த உத்தரவு தொடர்பில் தெரியவந்துள்ளது.

இதனிடையில், தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பல்கலை...

யுள்ளனர்.

இத்தாக்குதலில் இரண்டு பிக்குகள் உட்பட பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் சம்பத் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (எ-11)

## வடக்கில்...

வதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்திருந்தார்.

எனினும் தனிப்பட்டவர்கள் சமய நிகழ்வுகளை நடத்தலாம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் அரசாங்கம் போர் முடிவுக்கு வந்ததாக கூறும் மே 18 ஆம் திகதியன்று மாத்தறையில கொண்டாட்ட நிகழ்வை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மே-18 ஆம்...

கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக் கொள்ள முயற்சிக்கின்றோம். இழந்தவைகளும் அதன் துயர வலிகளும் அந்த நினைவுகளால் ஒத்தடம் பெறுவதை உணர்கின்றோம்.

ஆறாத வடுவாகி நிற்கும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை 40 ஆயிரம் தமிழ உயிர்களைத் தின்றதாக ஐ.நா சொல்கின்றது. களத்தில் நின்ற தமிழர்களுக்குத்தான் தெரியும் இன்னும் எத்தனை ஆயிரம் கொலைகள் சமநேரத்தில் நிகழ்ந்தவை என்று தாயின் கருவில் இருந்த சிசு தொடக்கம் நாளை கட்டையேறத் தயாராயிருந்த மூத்தோர் வரைக்கும், கண்மூடித்தனமாகக் கொன்றொழித்தவர்கள் வெற்றியைக் கொண்டாடுகையில், நாம ஒன்று கூடி ஒரு துளி கண்ணீரைக் காணிக்கையாக்கும் வழிவகையின்றி நிற்கின்றோம். இந்தக் காயங்களை சொற்களுக்குள் அடக்கிவிட முடியாது. நம் அவலத்திற்கு மொழியில்லை. அதனால்தான் அது இன்னமும் மௌனித்தேகிடக்கின்றது.

இந்த நாள்களில், நம்மிடம் இருக்கும் துயர் வலிமை பெற வேண்டும். முள்ளிவாய்க்கால் தந்த துயர நினைவுகளை நினந்துருகுதல் அந்த வலிமையைத் தரும் கணங்களாக இருககும். மே 18 இல் முள்ளிவாய்க்காலில் மரணித்த அனைத்து மக்களின் மரணப்பெறுமதியையும் கனதியாக்குங்கள்.

அன்றைய தினத்தை கரிநாளாகக் கடைப்பிடிப்போம். அதற்காக உங்கள் வீடுகளில் மே 18 ஆம் திகதி மாலை 6.10 மணிக்கு ஈகச் சுடரேற்றுங்கள். அந்தக் குறுகிய வன்முறை வெளியில் தம்மை ஆகுதயாக்கிக் கொண்டவர்களுக்காக ஒரு நிமிட அக வணக்கத்தைச் செலுத்துங்கள். இந்த நாளகளில் மௌனித்த அந்த ஆன்மாக்கள் மேன்மைபெற்டும் அவை நமக்கு வலிமை தரட்டும் என்று அந்த செய்திக்குறிப்பலமேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## இன அழிப்பு நாளா...

கின்றோம். மே 18 தமிழினத்தின் மீதான இன அழிப்பு நாள் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பிரித்தானியர்களிடமிருந்து இலங்கைத்தீவின் ஆட்சியதிகாரத்தினை சிங்களவர்கள் பெற்றுக் கொண்டனர். தீவைவிட்டுப் பிரித்தானியர்கள் வெளியேறிய நாள் தொடக்கம் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் வேலைத்திட்டங்களை இலங்கையின ஆட்சியாளர்கள் தீவிரப்படுத்தியே வந்தனர்.

இந்த அழிப்பிலிருந்து தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்ள அகிம்சை வழியில் தமிழ் அரசியல்தலைமைகள்மேற்கொண்ட ஜனநாயக வழிப்போராட்டங்கள் முழுமையாகத் தோல்வியடைந்தது. அதனால் தமிழ் மக்கள் தமது தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பயங்கரவாதத்தை அழித்தல் என்ற போர்வையில் 21-ம் நூற்றாண்டில் மனித குலத்திற்கு எதிரான சகல குற்றங்களையும் புரிந்தவாறு இந்த உலகின் கண்களின் முன்னால் இலங்கை அரசு மாபெரும் இனப் படுகொலையை வாகரையிலும், வன்னி மண்ணிலும் நிகழ்த்திக் கொண்டிருந்தது.

யுத்த சூனியப் பிரதேசங்களை அரசாங்கமே அறிவித்து அதற்குள் மக்களை வரவழைத்தது. நம்பி வந்த மக்கள் மீது எறிகணைகளை வீசி மக்களை கொத்துக்கொத்தாக கொன்றுகுவித்தது.

கர்ப்பிணித்தாய்மார்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் என எந்த வேறுபாடுகளுமின்றி அப்பாவி மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். அனைத்தும் நடந்து முடிந்த பின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஐ.நா அறிக்கையிட்டுள்ளது. ஆனாலும் 146 ஆயிரம் பேருக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியாதுள்ளது.

இன அழிப்பு ஒன்றின் மூலம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறைபடிந்த நாளாகும். அந்நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டநாளாகும். அந்நாளை இனவழிப்பு நாளாகவே நாம் பிரகடனம் செய்கின்றோம்.

கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை எமக்குள்ளது. இறந்தவர்களது ஆத்ம சாந்திக்காக முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எம் உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியான வழியில் அனைவரையும் கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம் என்று அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## அமைச்சர் டக்ளஸின்...

நிலைப்பாட்டாலேயே வெற்றிபெறவில்லை என்றும், அதுபோன்ற ஒரு நிலை மீண்டும் ஏற்படக் கூடாது எனவும் கூறுகிறார்.

நாட்டின் வடக்கே இராணுவத்தின் பிரசன்னம், ஆட்கள் கைது செயயப்படுவது போன்ற பிரச்சினைகளையே தீர்க்க முடியாத அமைச்சரால் இனப் பிரச்சினைக்கான தீர்வில் என்ன பங்காற்ற முடியும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்புகிறார்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தடைப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகுந்தது.

நாடாளுமன்றத் தேர்வுக் குழுவின் மூலமாக ஒரு தீர்வு எட்டப்படாவிட்டால் அரசில் தொடருவது குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டிய் தேவை ஏற்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளதையும் கூட்டமைப்பினர் விமர்சித்துள்ளனர். (எ-11)


### முக்கிய அறிவித்தல்

**27.04.2014 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டச்சான்றிதழ் நிகழ்வு தொடர்பான புகைப்படங்களையும், CD யையும் 14, 15, 16.05.2014 ஆகிய தினங்களில் புதிய உயர் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.**

யாழ். பல்கலைக்கழக
வெளிவாரி மாணவர் ஒன்றியம்

(6377)

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

**இலவச சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.**

O/L, A/L பரீட்சை முடித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச தனியார் ஊழியர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
பரீட்சை முடிவின்பின் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
ஒரு பிரிவில் 20மாணவர்களே அனுமதிக்கப்படுவர் பதிவுகளுக்கு முந்துங்கள்
**No: 328 Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)**
Tel : 021-222 4459, 0774192275, Fax: 021-222 4460

### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)**
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English (2 Months)**
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Batch I 17.05.2014 | Batch II 19.05.2014 | Batch III 21.05.2014 | Batch IV 24.05.2014

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(C-7335)
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org